S.M. Fernando
OPTICIANS
SIGHT TESTED PRESCRIPTIONS ACCURATELY DISPENSED
580, HOSPITAL ROAD, NEAR BANK OF CEYLON JAFFNA.

பக்கங்கள்: எட்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

எஸ்.எம்.பெர்ணண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

சுடர் 5: சுக்கில ஹு பங்குனி மீ 16 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 ரமழான் பிறை 1 (29-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 46

## பலாலியில் நேற்று இடம்பெற்ற சந்திப்பு



நேற்று பலாலியில் இடம்பெற்ற சந்திப்பில் பங்குகொண்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும், முப்படையினின் தளபதிகள் மற்றும் அதிகாரிகளைப் படத்தில் காணலாம்.

## யாழ். குடாநாட்டில்

# அரச படைகள் குவிக்கப்படமாட்டா!

# புலிகள் - அரசு சந்திப்பில் இணக்கம்

### முகாம் விஸ்தரிப்பும் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ் குடாநாட்டில் ஸ்ரீலங்காப் படைகள் குவிக்கப்படமாட்டா. தற்போதுள்ள எந்த முகாமும் விஸ்தரிக்கப்படமாட்டாது. புதிய முகாம்களும் திறக்கப்படமாட்டா.

நேற்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் பலாலியில் இடம்பெற்ற பேச்சுக்களின்போது இதற்கான இணக்கம் காணப்பட்டது.

குடாநாட்டில் எழுந்துள்ள சில பாதுகாப்பு பிரச்சினைகள் சம்பந்தமாக விடுதலைப் புலிகள் பிரமுகர்களுக்கும் இலங்கை அரசுப்பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நண்பகல் பலாலியில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இந்தப்பேச்சுக்களின் போது —

அரச தரப்பில் அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ் ஹமீத், ஜெனரல் சேபால ஆட்டிக்கல, பொலீஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் எச். ஆனந்த சில்வா, விமானப்படைத் தளபதி ஏர்மாஷல் டெரன் குணவர்த்தன, வடக்கு-கிழக்கு, வடமத்திய மாகாணங்களுக்குப் பொறுப்பான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி சில்வா, யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் திரு. எஸ். ஜெயராஜன் ஆகியோரும் படை உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் யாழ் மாவட்ட இராணுவத் தளபதி திரு. பானு. அரசியற்பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக், ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு. ராஜன், தீவுப்பகுதி இராணுவப்பொறுப்பாளர் திரு. ஜேம்ஸ் மற்றும் பிரமு

(7 ஆம்பக்கம் பார்க்க)

### 80வயது நடிகைக்கு ஒஸ்கார் விருது

லொஸ் ஏஞ்சல்ஸ், மார்ச் 29

உலகின் சிறந்த நடிகைக்கான 'ஒஸ்கார்' விருது எண்பது வயது நடிகை ஜெஸிக்கா ரண்டி என்பவருக்கு வழங்கப்பட்டது.

'ட்ரைவிங் மிஸ் டெய்ஸி' என்ற படத்தில் யூத மேட்ரனாக இவர் நடித்தார்.

சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருது டானியல் டே லூயிஸ் என்ற பிரிட்டிஷ் நடிகருக்குக் கிடைத்தது.

இவர் ஊனமுற்ற ஐரிஷ் எழுத்தாளர் கிறிஸ்டி பிரவுண் ஆக 'மை லெப்ட்புட்' என்ற ஐரிஸ் படத்தில் நடித்தார். [தி-எ]

### நகரில் மழை

யாழ்ப்பணம் மார்ச் 29

நீண்டகால இடைவெளியின் பின்னர் யாழ்ப்பாண நகரத்திலும், குடாநாட்டின் ஏனைய சில பகுதிகளிலும் நேற்றுப் பிற்பகல் மழை பெய்தது.

சுமார் அரை மணி நேரமாகக் கணிசமான அளவு மழை பெய்தது. [அ]

### திருமலையில் கொள்ளை!

திருகோணமலை மார்ச் 29

திருகோணமலை மட்டிக்களிப்பகுதியில் மீன் ஏற்றி வந்த லொறி ஒன்று மறிக்கப்பட்டு 96 ஆயிரம் ரூபா கொள்ளையிடப்பட்டது

இந்தச்சம்பவம் நேற்று நடைபெற்றது. [உ]

### சுப நேரம்

29-3-1990

வியாழக்கிழமை பங்குனி 16

சுபநேரம்:

07-43முதல் 09-13 வரை

இராகுகாலம்

01-43 முதல் 3-13 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

### கம்பஹாவில் தாக்குதல்

சம்பஹாப் பகுதியில் நேற்று சென்ற படையினர் ஆட்டோ ரிக்ஷா ஒன்றை திடீரென மறித்து சோதனையிட முற்படுகையில் அதில் வந்தோர் ஓடித் தப்ப முயன்றனர்.

ஓட முயன்றோரை நோக்கிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமுற்றனர். மூவரைப் பொலீஸார் கைது செய்தனர். ஆயுதங்களும் மீட்கப்பட்டன. [உ]

### இன்று விடுமுறை

அரசாங்கப் பாடசாலைகள் முதலாம் தவணை விடுமுறைக்காக இன்று (வியாழன்) மூடப்படுகின்றன

இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் மே மாதம் 2ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும்.

ஜி. சி. ஈ சாதாரணப்பத்திரப்பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி ஏப்ரல் 8 உடன் முடிவடையும்

## 48 மணி நேரத்துக்குள் வல்வை முகாம் மூடப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 29

''குடாநாட்டில் உள்ள சிறிய படை முகாம்களை இலங்கை அரசு உடனடியாக மூடும். குறிப்பாக வல்வெட்டித்துறை இராணுவ முகாம் 48 மணி நேரத்துக்குள் மூடப்படும்.''

இப்படி அரசு தங்களுக்கு உறுதியளித்திருப்பதாக விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் உதயனுக்கு தெரிவித்தனர்.

நேற்று பலாலியில் இடம்பெற்ற சந்திப்பின்போது அரச தரப்பில் இதற்கு உறுதிமொழி வழங்கப் பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

கிடைத்த தகவல்களின்படி ஸ்ரீலங்காப்படையினர் இனிமேல் குடாநாட்டில் பலாலி, காங்கேசன், யாழ்ப்பாணம் கோட்டை, காரைநகர், நயினாதீவு ஆகிய இடங்களில் மட்டுமே நிலை கொண்டிருப்பார்கள். (உ-9)

## தெஹிவத்தை தடைமுகாம்; விடுதலைப்புலிகள் ஆட்சேபம்

கொழும்பு, மார்ச் 29

மூதூர் தெஹிவத்தைப் பகுதியில் வீதிக்குக் குறுக்கே தடைமுகாம் அமைத்துள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அப்பகுதியால் போய்வரும் பொதுமக்களைச் சோதித்து வருகின்றனராம்.

இதனை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநரை விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் கேட்டிருப்பதாகவும்—

உடன் நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் உறுதியளித்திருப்பதாகவும் தெரியவருகிறது. [உ]

### உணவு முத்திரைகள் இன்று வந்து சேரும்

யாழ்ப்பாணம் மார்ச் 29

யாழ். மாவட்டத்துக்கான ஐந்தாம் தொடர் உணவு முத்திரைகள் இன்று யாழ்ப்பாணம் கொண்டுவரப்படவிருக்கின்றன.

தற்சமயம் நடைமுறையில் இருந்த உணவு முத்திரைத் தொடர் இந்த மாதத்துடன் முடிவடைகிறது.

புதிய தொடர் முத்திரைகளை எடுத்துவர கொழும்பு சென்ற அதிகாரிகள் இன்று அவற்றை கொண்டு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாரத்தில் உதவி அரசாங்க அதிபர்கள் மூலமாக இந்த முத்திரைகள் விநியோகிக்கும் வேலைகள் ஆரம்பமாகவிருக்கின்றன. [உ-3]

### அங்காடி வியாபாரிகளுக்கு கஸ்தூரியார் வீதியில் இடம்!

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ் நகர் அங்காடி வியாபாரிகளுக்கு கஸ்தூரியார்வீதியில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் கஸ்தூரியார் வீதியில் முன்பு லொறிகள் நிறுத்திய பகுதியில் இவர்கள் வியாபாரம் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ் நகரத்தில் முக்கிய இடங்களில் எல்லாம் அங்காடி வியாபாரம் நடந்து வருவதால் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சல் ஏற்படுவதாக யாழ் மாநகர சபைப் பகுதியினர் சுட்டிக் காட்டுகின்றனர். (ஒ-8)

## முச்சந்தி முரளி



அப்ப ...... ஐம்பதிலும் ஆசை வரும். எண்பதிலும் விருது வரும் ......!

# பிரதமர் இராஜினாமா!

# மந்திரிகள் பதவி இழப்பு!!

கொழும்பு, மார்ச் 29

பிரதமர் பதவியில் இருந்து திரு. டி. பி. விஜேதுங்க நேற்று இராஜினாமாச் செய்தார். அதைத் தொடர்ந்து அமைச்சர்களும் துணை அமைச்சர்களும் பதவி இழந்துவிட்டனர்.

பிரதமரின் இராஜினாமா நேற்று நண்பகலில் இருந்து அமுலுக்கு வந்ததாக ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

பிரதமரின் இராஜினாமாவைத் தொடர்ந்து, சட்டம் - ஒழுங்கு நடைமுறைக்கமைய ஏனைய அமைச்சர்களும் துணை அமைச்சர்களும் பதவி இழக்கிறார்கள் என்றும் ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கை தெரிவித்தது.

### ரஞ்சனின் [ ] பெயரும்...!

கொழும்பு, மார்ச் 29

புதிய பிரதமராக நியமனம் பெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுபவர்கள் பட்டியலில் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் பெயரும் இடம் பெற்றிருப்பதாக நேற்று மாலை பி. பி. சி. தெரிவித்தது. [ஒ-எ]

அரசியல் யாப்பின் 43, 44,

(7ஆம் பக்கம் பார்க்க)

### நோன்பு திறக்கும்நேரம்

29-03-1990

ஸஹர் முடிவு — 4-36

நோன்பு திறக்கும் நேரம் 6-21

# புதிய பிரதமர், மந்திரிகள் விவரம் இன்றுதெரியவரும்

இன்று (வியாழன்) பிற்பகல் புதிய அமைச்சரவை பற்றி அறிவிக்கப்படும்.

திரு. ரஞ்சன் விஜேரத்தினா இத்தகவலை நேற்று வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

பிரதமரின் ராஜினாமாவுக்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஐ. தே. க. செயற்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி விடுத்த அறிக்கைக்கு அமையவே பிரதமர் ராஜினாமாச் செய்தார்.

அமைதிப்படை வெளியேறிதன் பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அசம்பாவிதம் ஏதும் நடைபெற்றதாக அறிவிக்கப்படவில்லை.

— இப்படி திரு. விஜேரத்தினா தெரிவித்தார். (ஒ-எ)



பலாலியில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் அரச தரப்பில் பங்குகொண்ட அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத், ஜெனரல் சேபால ஆட்டிகல ஆகியோர்.

## பாஸ்கரலிங்கத்துக்கு அமைச்சர் பதவி?

கொழும்பு, மார்ச் 29

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா இன்று நியமிக்க இருக்கும் புதிய மந்திரி சபையில் இடம்பெற இருக்கும்புது முகங்களில் நிதிஅமைச்சின் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கமும் ஒருவராக இருக்கக்கூடுமென்று அரசுடன்

(7ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

உடைந்த வீட்டின்சிதைந்த கற்கள், தறித்த இலுப்பை மரம் உடன் விற்பனைக்கு உண்டு. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். அ. உமா சங்கர், 19, நல்லூர்குறுக்குத் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (3039)

6 ஸ்ரீதொடர் இலக்கம் பிறிட்டா ஸ்கூட்டர் (இத்தாலி) விற்பனைக்கு உண்டு. விலை 12,500/- தொடர்பு சன்லைட் றைக்கிளினேர்ஸ், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (செஞ்சிலுவைச்சங்கம் முன்பாக) (12232)

ஓரளவு பாவித்த National Video, Camera 200 N National Deck NV-100 உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வே. பாரதிதாசன், ''ரதிமகால்'' கரவெட்டி மேற்கு, கரவெட்டி. (12233)

Honda C 50 புதிய மோட்டார் சைக்கிள் [லான்சர் மொடல்] விற்பனைக்கு உண்டு. Bond Institutes 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (3041)

### 90 ஆம் ஆண்டுப் பஞ்சாங்கம்

இரகுநாதையர் வாக்கிய, திருக்கணிதபஞ்சாங்கம் வியாபாரிகட்கு தொகையாக விசேட கழிவுடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீ காந் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். (சி/3487)

### உறுதிப் பத்திரங்கள்

தமிழ், ஆங்கில உறுதிப் பத்திரங்கள் விற்பனைக்கு உண்டு. இல. 1, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3038)

### தேவை

யாழ் நகர மத்தியில் புதிதாக மறுசீரமைக்கப்பட இருக்கும் ஐஸ்கிறீம்சாலைக்கு பெண் ஊழியர்கள் தேவை. நகருக்குஅண்மையில்உள்ளவர்கள் விரும்பத்தக்கது. டில்கா கிறீம் கவுஸ், 404, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். (3032)

றேடியோ, ரி. வி., டெக் திருத்துவதில் அனுபவம் உள்ளவர் தேவை. டில்கா றேடியோ ரி. வி றெக்னீசியன்ஸ், 404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3033)

### லிகிதர் தேவை

மின் தறி நெசவாலைக்கு அனுபவம் மிக்க லிகிதர் தேவை., 31-03-90 காலை 10 மணிக்கு அனுபவச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும். ஸ்ரீராஜ் ரெக்ஸ் இன்டஸ்ரீஸ், வட்டு கிழக்கு சித்தன்கேணி. (வட்டு இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்) (3036)

### தவறிவிட்டது

யாழ் பஸ் நிலையத்திற்கும் கஸ்தூரியார் வீதியில் அப்பையா கடைச் சந்திக்குமிடையில் நிறுவனப் பணமானரூபா 16,500/- ஊழியராகிய என்னால் தவறவிடப்பட்டு விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் மனிதாபிமானத்தின் பேரால் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன் தகுந்த சன்மானம் வழங்கப்படும். பொ. இரவீந்திரன், மே/பா ஆ. வேலுப்பிள்ளை அன்சன், 50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (3040)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி/3451)

### டாக்டர் பட்டம்

இந்தியாவில் உத்தியோக பூர்வ விஜயத்தை தற்போது மேற்கொண்டுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாஸீர் அரபாத்துக்கு இந்தியாவின் யாமியா நளீமியா பல்கலைக் கழகம் கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது. [உ-6]


**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**A/L 90**

மீட்டல் வினா, விடை வகுப்புகள்

கணக்கியல் — யோகராசா
வர்த்தகம் — தேவா

ஆரம்பம்: 02 - 04 - 1990

(சி-4176)



## முக்கிய அறிவித்தல்

அங்கர் பால் மா பாவனையாளர்களின் கவனத்திற்கு தற்போதைய விலை விபரம்

★ அங்கர் பைக்கெட் ஒன்றின் சில்லறைவிலை - 46.00
★ அங்கர் தொன்பற் பைக்கட் ஒன்றின் விலை - 56.00
★ அங்கர் 1 கிலோ ரின் ஒன்றின் விலை - 130.00
★ அங்கர் 2 கிலோ ரின் ஒன்றின் விலை - 245.00
★ அங்கர் பட்டர் 113 gm சிறிது ஒன்றின் விலை - 18.60
★ அங்கர்பட்டர் 250 gm பெரிது ஒன்றின் விலை- 39.75

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

யாழ் முகவர்,
எஸ். வி. முருகேசு,
160, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(2994)


## 21 ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்வி வாசுகி மணிவாசகன்

தோற்றம்: 07- 11- 1981 — மறைவு:- 08- 03- 1990

அருமைக் கண்மணியே!
இந்து மகளிர் கல்லூரி ஆரம்பப் பாடசாலையில் பயின்று அங்குள்ள ஆசிரியைகளுக்கும், எனக்கும் அருமை மகளாய் ஒளிர்ந்த மாணிக்கமே எங்களைத் தவிக்க விட்டுப் போயினையோ! இனி உன்னைக் காண்பதெப்பொழுதோ?

அருமைத் தாயார் விமலா மணிவாசகன்,
பாட்டன் பாட்டிமார், கந்தையா மாணிக்கவாசகர்,
தங்கரத்தினம், கந்தையா, அன்னபூரணி,
வயித்திலிங்கம்.

42/1, கல்லூரி வீதி,
நீராவியடி.
யாழ்ப்பாணம் (சி/4187)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### மடுத்தீன் - அந்தோனிமுத்து

கருவறையிலிருந்து வெளிவந்தது 22. 05. 1942 — குடும்ப நெஞ்சறையில் இருந்து ஒளி மறைந்தது 27 02. 1990

அந்தோனிமுத்து என்ற செகம் புகழ்த்தலைவா
செகத்தினை விடுத்து நீர் இறைபதம் அடைந்தீர்
வையகம் போற்ற வளம் பெற வந்தீர்
வற்றாத பொய்கை வரண்டுபோய் விட்டதையா
தானமும் தர்மமும் தவபூசை செய்தனையே
சாந்தமும் சற்குணமும் தரணியை விட்டதையா
குடும்பத்தலைவனே கொற்றவனே நான் மறவேன்
குழந்தை இருவருக்கும் கும்பிடத் தந்தையில்லை
அப்பாவின் குரல் கேட்க ஆசையாய் இருக்குதென்று
துன்புற்றிங்கே துயர்பட்டு நிற்கிறார்கள்
சடுதியில் இந்த தரணியை விடுத்தே
கடுகினீர் இறைவன் கழலிணை அடிகளை
அடைக நின் ஆத்மா அரிய நற்சாந்தி
அடைக அடைக அடைக நற்சாந்தி

நின் பிரிவால் வாடும்
மனைவி பாக்கியவதி,
பிள்ளைகள்: றொபின்சன், வனஜா,
சகோதரிகள், மைத்துனர்கள்.

மடம் வீதி,
யாழ்ப்பாணம். (2991)

★ வடக்கு, கிழக்கிற்கு

# புனரமைப்புக்கு வந்த பலகைகள் அதிகளவு விலைக்கு விற்பனை!

கொழும்பு மார்ச் 29
வடக்கு, கிழக்கு பகுதிகளில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட வீடுகளை புனர் நிர்மாணம் செய்வதற்காக அவுஸ்திரேலியா அரசினால் நன்கொடையாக வழங்கப்பட்ட பலகை மற்றும் மரங்களை அரச மரக் கூட்டுத்தாபனம் அதிக விலைக்கு விற்பனை செய்திருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் லெப்டினண்ட் ஜெனரல் நளின் செனவிரத்தினாவின் கவனத்துக்கு இது கொண்டு வரப்பட்டு உள்ளது.

இப்பலகை பரங்கள் அரச மரக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான மர அரிவு ஆலையில் அறுக்கப்பட்டு ஒரு கன மீற்றர் 330 ரூபா என்ற வீதத்தில் விற்பனை செய்யப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

வீடுகளைப் புனர் நிர்மாணம் செய்ய பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் 15 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்படுகிறது.

ஆனால் அந்த வீட்டுக்குத் தேவையான மரங்களை மட்டும் வாங்க அந்த நபர் அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு 15 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டி ஏற்படுகிறது. (உ-எ)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மீண்டும் இணக்க சபைகள்

ஒட்டுசுட்டான் மார்ச் 29
முல்லை மாவட்டத்திலுள்ள கிராம சேவை அலுவலகர் பிரிவுகளில் மீண்டும் இணக்கசபைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிராந்தியப் பொறுப்பாளர் இதற்கான நடவடிக்கையில்துரிதமாகஈடுபட்டு வருகிறார்.

அண்மையில் கற்சிலைமடு கிராமத்திலுள்ள மக்களால் இணக்கசபை உறுப்பினர்கள் தெரிவு இடம் பெற்றது.

பின் வருவோர் இணக்க சபைநிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- கே. மகாதேவா
செயலாளர்;- கு. சதாசிவம்.
பொருளாளர்;- அ. குமாரசுவாமி.

மற்றும் எட்டு உறுப்பினர்கள் தெரிவாகினர். (இ-113)

# ஈழகேசரி பொன்னையா நினைவு நாள் விழா ஏப். 1இல்

யாழ்ப்பாணம், மார்ச் 29
''ஈழகேசரி'' நா. பொன்னையா நினைவு நாள் விழா குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் ஏப்ரல் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

வட மாநில சித்திர வித்தியாதிகாரி கலாகேசரி ஆ. தம்பித்துரை விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

பண்டத்தரிப்புக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் ''ஈழகேசரி'' நா. பொன்னையா பிரதிமைப் படத்திற்கு மலர்மாலைசூட்டி ஆரம்ப உரை நிகழ்த்துவார். திறந்த வெளிப் பல்கலைக் கழக விரிவுரையாளர் சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் 'ஈழத்தில் அச்சகக்கலையும் குரும்பசிட்டியும்' என்ற தலைப்பில் நினைவு நாள் உரை நிகழ்த்துவார்.

கலைப்பேரசு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் ''ஈழகேசரி'' நா. பொன்னையாவால் ஆரம்பிக்கப்பட்ட திருமகள் அழுத்தகத்தை அரை நூற்றாண்டுக்கு மேலாக வளர்த்து முன்னோடி அச்சகமாக்கிய பெருமைக்குரிய திரு. மு. சபாரத்தினம், திரு. செ. சின்னத்துரை, திரு. ஆ. முத்தையா ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்படுவார்கள்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் இவர்களைக் கௌரவிப்பார்.

திரு. சு. வேலுப்பிள்ளை (சு. வே.) ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், மயிலங்கூடலூர் ஈ. நடராசன் ஆகியோர் பராட்டுரைகளை நிகழ்த்துவார்கள். (க)


## உடன் தேவை

### நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில்

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உடன் விண்ணப்பிக்கவும்.

1 பதவிகள்: நிறைவேற்று அலுவலர்/கணக்காளர்.
2. வயது: 45-55
3 தகுதி [2] அரசாங்க / கூட்டுத்தாபன /தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவம் உள்ளவர்கள் இத்தகைய வெற்றிடங்களுக்கு தமது தராதப் பிரதிகளுடன் விண்ணப்பிக்கலாம்.
4. சம்பளம்: 1. நிறைவேற்று அலுவலர் சகலமும் உட்பட மாதம் 2500/-
2. கணக்காளர் மாதம் 2250/- ரூபா
5. பிணைப்பணம்: ரொக்கம் ரூபா 5000/- [வட்டியுடன் மீளக் கொடுக்கப்படும்]
6. விண்ணப்ப முடிவு திகதி: 15-04-1990
3 1. கல்வித் தராதரம்: க. பொ. த. ப [உயர்தரம்] மற்றும் உயர்கல்வி சான்றுகள்.
2. இந்துவாகவும், ஆலய அனுபவம் உள்ளவராகவும் இருக்க வேண்டும்.
3. அனுபவம்: முன் அனுபவம் பற்றிய 2 சான்றுப் பத்திரங்கள்.

இங்ஙனம்,
ஆ. தியாகராசா,
கௌரவ செயலாளர்.

அறங்காவலர் சபை,
ஸ்ரீநாகபூசணி அம்மன் கோயில்,
நயினாதீவு [சி-4181]



## பதவி வெற்றிடம்

பருத்தித்துறை புலோலி
தெங்கு பனம் பொருள் உ. வி. கூ. சங்கம்

### பொது முகாமையாளர் தரம் III

1. (அ) கல்வித் தகைமைகள்
கூட்டுறவு பயிற்சிபெற்ற பட்டதாரி அல்லது 5 வருடகால அனுபவம் பொருந்திய முன்னை நாள் கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது பொது முகாமையாளர் தரத்திற்கு குறையாத இரண்டுவருட அனுபவத்துடன் பதினைந்து வருட கூட்டுறவு அனுபவம்.
2. சம்பளம் கூட்டுறவு சேவையாளர் ஆணைக்குழுவின் பொது முகாமையாளர் தரம் III க்கு அமைவாக அத்தோடு வாழ்க்கைச் செலவுப்புள்ளியும்.
3. வயது 20 தொடக்கம் 40 வரை
4. விண்ணப்ப முடிவு:- 20 - 04 - 1990

குறிப்பு:- சங்க எல்லைப் பரப்பிற்குள்ளும், சங்க ஊழியர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள்:- தலைவர், பருத்தித்துறை - புலோலி தெங்கு பனம் பொருள் சங்கம், சிவன் வீதி. பருத்தித்துறை என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்
பருத்தித்துறை - புலோலி
தெங்கு பனம் பொருள் சங்கம்
பருத்தித்துறை

[2986]


## விதவைகளுக்கு உதவி

பருத்தித்துறை மார்ச் 29
சர்வோதய சிரமதான இயக்கத்தின் வடமராட்சிக் கிளை விதவைகளுக்கான சுயதொழில் உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. புனர்வாழ்வு வேலைத்திட்டத்தின் கீழ் விதவைகளுக்கானசுயதொழில் முயற்சிக்காக வல்வெட்டி பாரதி வீதியைச் சேர்ந்த விதவையான திருமதி சின்னத்துரை மகேஸ்வரி என்பவருக்கு நல்லினக் கறவைமாடும் கன்றும் வழங்கப்பட்டது. இதே போன்று பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த விதவையான திருமதி. செ.லேனம்மா என்பவருக்கு பலசரக்கு வியாபாரம் செய்வதற்கு கடை ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வடமராட்சி சர்வோதயத்தில் விண்ணப்பித்தவர்களுக்கு பரிசீலனையின் பின் தொடர்ச்சியாக உதவி வழங்கப்படவுள்ளதெனசர்வோதய இயக்க வடமராட்சிக் கிளைப் பொறுப்பாளர் திரு. ப. தில்லைநாதன் தெரிவித்துள்ளார். (க-119)

## இளைப்பாறினார்

யாழ்ப்பாணம் மார்ச் 29
யாழ்ப்பாணம் அஞ்சல் திணைக்களத்தின் பிரதேச கணக்காளர் அலுவலகத்தில் நிர்வாக உதவியாளராகப் பணிபுரிந்த திரு எஸ். சிவ. சொரூபநாதபிள்ளை நிர்வாகச் செயலாளராகப் பதவி உயர்வு பெற்றதுடன் தமது 60 வயதைப் பூர்த்தி செய்துகொண்டு அண்மையில் இளைப்பாறியுள்ளார்.

வட்டுக் கோட்டை சிவன் கோவிலடியைச் சேர்ந்த இவர் சிறந்த சங்கீத வித்துவானாகவும், நாட்டுக்கூத்துக்களைப் பழக்கி அரங்கேற்றுவதில் வல்லவராகவும் விளங்கினார். இவரது சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில் இவரது 60 ஆவது கலியாண வைபவத்தை அண்மையில் இவரது திணைக்கள ஊழியர்கள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். (க


# கலை வர்த்தகக் கல்லூரி

## C. C. A

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி அருகே)

## A/L 90 DAY CLASSES

பிரிவு III
மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்
02 - 04 - 1990
திங்கள்: 8.00 A.M

★ எமது வழமையான ஆசிரியர் குழு
★ ஒவ்வொரு பாடமும் வாரத்தில் 8 மணித்தியாலமாக நடைபெறும்.
★ முழுப்பாடத் திட்டமும் முடிக்கப்படும்.
★ வினா விடை வகுப்புக்கள் இலவசமாக நடைபெறும்.

(சி/4184)



## 'M' THREE TRAVEL

வழங்கும்

## உடனடிப் பிரயாணம்

சவூதி அரேபியா (Saudi Arabia)

அரபு நாடுகளில் வேலை செய்தவர்களுக்கு மட்டும்

Trailer Driver — 800 S.R
(கனரக வாகன சாரதி)

பெண்களுக்கு மட்டும்
Hospital Cleaners — 475 S.R
(பாடசாலை சுத்திகரிப்பாளர்)

Passport, Bond என்பன குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

★ நம்பிக்கை
★ நாணயம்

என்பனவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய தாபனம்

# 'M' Three Travel

தலைமை அலுவலகம்
''இந்திர பவனம்''
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்
இல 1, 2ஆவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4182)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து

**பொருள்:**
இவளுடைய மைதீட்டிய கண்களில் உள்ளது இரு வகைப்பட்ட நோக்கமாகும்; அவற்றுள் ஒரு நோக்கம் நோய் செய்யும் நோக்கம்; மற்றொன்று அந்நோய்க்கு மருந்தாகும்.


உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
29-03-1990 தபெ இலக்கம் : 23


# உள்ளூராட்சி அமைப்பில் மாற்றம் தேவை

மாநகரசபைகள், நகரசபைகளுக்கு விரைவில் தேர்தல்களை நடத்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது தேர்தல் ஏற்பாடுகளைச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடந்து பத்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அவற்றில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் ஒழுங்காகச் சமுகமளிக்காததாலோ அல்லது பதவிகளை ராஜினாமாச் செய்ததாலோ அவை இப்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிறுவனங்களாகிவிட்டன. அதிகாரிகளால் நிர்வகிக்கப்படும் வெற்றுச் சபைகளாக மாறிவிட்டன

மக்கள் பிரதிநிதிகள் இல்லாத மக்கள் சபைகள், முழுப் பயன் தரும் விதத்தில் இயங்குவது கஷ்டம். அவற்றைப் பெயருக்காக இயக்கும் அதிகாரிகள் சில சந்தர்ப்பங்களில் தாம் நினைத்த மாதிரிச் சர்வாதிகாரமாகச் செயற்பட முயற்சிக்கிறார்கள். பல வேளைகளில், அதாவது அநேகமாக, மத்திய அரசு அதிகாரிகளின், கொழும்பு அதிகாரிகளின் தயவில் தங்கியிருந்து கருமமாற்றுகிறார்கள்; காலத்தை ஓட்டுகிறார்கள்.

அதன் விளைவாக உள்ளூராட்சி சபைகள் மட்டத்தில் மக்களுக்கான பணிகள், சேவைகள், முழு அளவில் திருப்திகரமாக நடைபெறவில்லை. உள்ளூராட்சிப் பகுதிகளின் வளர்ச்சி சிறப்பாக உள்ளது என்று சொல்லக் கூடிய நிலையும் இல்லை.

மக்கள் ஆட்சி அடிமட்டத்திலிருந்து, கிராமத் தளத்திலிருந்து கிளை விட்டாலே உண்மையான சனநாயக வாழ்வும், அரசியல் பொருளாதார வளர்ச்சியும் காண முடியும். ஆனால் இலங்கையில் இன்னும் அந்த நிலை உருவாகவில்லை அடிமட்டத்தில் இருந்து மக்களின் அரசியல் பங்களிப்புப் பெறப்படும் என்று வாயளவில் பேசப்பட்டு, எழுதப்பட்டு வந்தாலும் செயலளவில் எதையும் காணோம்.

ஆட்சிப் பகிர்வு, அதிகாரப் பகிர்வு என்று பல காலமாகக் கூறப்பட்டு வந்தாலும், அதிகாரம் இன்னமும் கொழும்பிலேயே குவிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மட்டத்தில் மக்கள் பங்களிப்பை அதிகரிக்க எதுவும் செய்யப்படவில்லை.

மாவட்டசபைகள் வந்ததோடு கிராம சபைகள் ஒழிக்கப்பட்டன. அவற்றுக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட கிராமோதய சபைகள் வலுவானவையாக இல்லை. சனசமூக நிலையங்களுக்குச் சமாந்தரமானவையாகவே, சமமானவையாகவே கிராமோதய சபைகளும் இருந்தன. தமிழ்ப் பகுதிகளில் அவை முற்றாகச் செயலிழந்துள்ளன. பிரதேச சபைகளும் உருப்படியாக இயங்கவில்லை.

மொத்தத்தில் கிராம மட்டத்தில் அரசியல் அதிகாரம் வேர்விட்டுச் செறியவில்லை. அதனால் கிராம வளர்ச்சி குன்றிவிட்டது. இலங்கை போன்ற நாட்டில் கிராமங்களில் வளர்ச்சி இல்லையேல் நாட்டு வளர்ச்சி குன்றும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

காந்தியடிகள் காட்டிய கிராம ராட்சியம் உருவானால் தான் உண்மையான மக்கள் ஆட்சி மலர முடியும். இலங்கையின் அரசியல் தலைவர்கள் கிராம இராட்சியம் குறித்து அடிக்கடி பேசிக் கொண்டாலும் அடிமட்ட மக்களின் அரசியல் பங்களிப்புடன் கூடிய எந்தச் செயலாற்று நிறுவனத்தையும் காணமுடியவில்லை.

தமிழ்ப் பகுதிகளில் மட்டுந்தான் இந்த நிலை என்று சொல்வதற்கில்லை. நாடு முழுவதிலுமே நாடாளுமன்ற அதிகாரமே மேலோங்கி நிற்கக் காணலாம். கிராம மட்டத்திலும் அதிகாரம் செறிந்து மக்களின் பங்களிப்புடன் உண்மையான சுயாட்சி மலரவேண்டும். அதுவே மக்கள் ஆட்சி எனச் சொல்லத் தகுதிபெறும்.

அந்தத் தகுதியைப் பெறுவதற்கு நாட்டின் உள்ளூராட்சி அமைப்பில் பூரண மாற்றம் தேவை. கிராம ராச்சியத்தை கருக்கோட்பாடாக வைத்து, மக்களுக்கு உண்மையான சுயாட்சியை வழங்கும் விதத்தில், உள்ளூராட்சி அமைப்பை மாற்றவேண்டும். கிராமப் பொருளாதாரம் முதல் நாட்டுப் பொருளாதாரம் வரை வளர்ச்சி கண்டு நாடு முன்னேறும் விதத்தில் நாட்டின் அரசியல் அதிகார அமைப்பில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். அப்போதுதான் உள்ளூராட்சி அரசியலில் புதிய உத்வேகமும் எழுச்சியும் பிறக்கும். இது இன்றைய அவசரத்தேவை.

# எரிபொருள் நிலையங்களில் திடீர் பரிசோதனைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29
வடமாகாணத்தில் உள்ள எரிபொருள் நிலையங்களில் மாதமொரு தடவை திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்படிக் கூறினார் பெற்றோலியக் கூட்டுத்தாபன வட பிரதேச முகாமையாளர் திரு. எஸ். சிவஞானம்,

அளவையிடல் திணைக்களம் யாழ் மாவட்டத்தில் உள்ள எரிபொருள் நிலையங்களுக்கு ''சீல்'' வைக்கும் வேலைகளை மேற்கொள்ள இருப்பது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

''இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த எம் ஆதரவை வழங்குவோம். அதே நேரம் இதனால் ஏற்படும் சில நடைமுறைச் சிக்கல்களை அவர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்றார்.'' (இ - 3)

## ஆசிரியர் பயிலுநர்

மட்டக்களப்பு மார்ச் 29
மட்டக்களப்பு மாவட்டத்தில் 442 பேர் அண்மையில் ஆசிரியர் பயிலுநர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள்.

மேற்படி தகவலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.கு. சோமசுந்தரம் தெரிவித்தார்.

இம் மாவட்டத்தில் சுமார் 900 ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு மட்டும் வெற்றிடம் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (சு-21)

## நியமனங்கள்

மட்டக்களப்பு மார்ச் 29
மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளில் 24 உடற்கல்வி போதனாசிரியர்கள் அண்மையில் புதிதாக நியமனம் பெற்றுள்ளனர் என்று பிரதி கல்விப்பணிப்பாளர் திரு கு. சோமசுந்தரம் தெரிவித்தார்.

உடற்கல்வி போதனாசிரியர்கள் ஒவ்வொரு கொத்தணிக்கும் நியமனம் பெற்றுள்ளார்கள். மேலும் 22 கலை விஞ்ஞான பட்டதாரிகள் வடக்கு கிழக்கு மாகாண சபையால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (சு-21)

## யூனிசெப் உதவி

வவுனியா மார்ச் 29
ஆசிகுளம், கோமரசன்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள சுகாதார தொண்டர்களுக்கு யூனிசெப் (Unicef) நிறுவனம் 12 சைக்கிள்களை வழங்கவுள்ளது.

பாதிப்புக்கு உள்ளான எல்லைப்புறக்கிராமங்களான இப்பகுதியின் புனர்வாழ்வுக்கென சிறுவர் கல்வி சுகாதார சேவை போன்றவற்றில், சிறுவர் பாடசாலைகள் அமைத்தும், சுகாதார தொண்டர்களைப் பயிற்றுவித்து, சேவையில் ஈடுபடுத்தியும் வருவது குறிப்பிடத்தக்கது. (சு-164)

## சமய சந்திகளில்

## இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 29
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் திருவிழா இன்று பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஏப்ரல் 7 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு மஞ்சத்திருவிழாவும் வருடப்பிறப்பன்று பகல்11.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் மாலை 3 30 மணி அளவில் கொடியிறக்கமும் நடைபெறும்.

உற்சவகிரிகைகளை தேவஸ்தான பிரமகுரு பிரம்மஸ்ரீ சோ. சந்திரகாந்த குருக்கள் நடத்தி வைப்பார். (க)

## குருபூசை

யாழ்ப்பாணம், மார்ச் 29
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் குருமஹா சந்நிதானம் நல்லைக்குரு மணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகளது குருபூஜை ஏப்ரல் 2 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும். [ச]

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 29
வட்டுக்கோட்டை - சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

சப்பறத் திருவிழா ஏப்ரல் 7 ஆம் திகதி சனிக்கிழமையும் தேர்த்திருவிழா 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தீர்த்தத் திருவிழா 9 ஆம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறும். [க]

# கிளிநொச்சி கஷ்டப்பிரதேச ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

தாளையடி. மார்ச் 29
கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்தும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு விமோசனம் அளிக்கும் விதத்தில் இடமாற்றத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில், இரண்டு நாள் நடைபெற்ற ''கஷ்டப் பிரதேசப் பாடசாலை'களின் கல்விப் பிரச்சினைகள்'' என்

## கருத்தரங்கில் கோரிக்கை

னும் விடயம் தொடர்பான கருத்தரங்கின் இறுதி நாளன்று இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனம், பிரெடரிக் ஈபேர்ட் மன்றம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து இக் கருத்தரங்கை ஒழுங்கு செய்திருந்தன.

நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களாவன,

★ கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கொத்தணிகள் கஷ்டப் பாடசாலைத் தெரிவுகள் ஆகியன மறுசீரமைக்கப்பட வேண்டும்.

★ கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு போக்குவரத்து, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்

★ ஆசிரியர்களது கொடுப்பனவுகள் எதுவும், கல்வித்திணைக்களத்தினால துரிதமாக்கப்பட வேண்டும். (இ-144)

## இறை வரி திணைக்கள ஆணையாளர்

கொழும்பு' மார்ச் 29
யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த திரு. தம்பிப்பிள்ளை ரத்னசுந்தரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக அண்மையில் பதவி ஏற்றுள்ளார். (இ-க)

# வவுனியாவில் ஜீ.சி.ஈபரீட்சைக்கு 3500 மாணவர் தோற்றுவர்

வவுனியா, மார்ச் 29
எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜி. சி. ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு வவுனியா மாவட்டத்தில் இருந்து 3500 மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்று கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் 21 நிலையங்களில் இம்முறை பரீட்சை நடைபெறவுள்ளது. இதற்கென செட்டிகுளம், பூவரசங்குளம், ஓமந்தை, புளியங்குளம் ஆகிய இடங்களில் தலா ஒவ்வொரு இணைப்பு நிலையங்களும் வவுனியா நகரில் மூன்றுமாக ஏழு இணைப்பு நிலையங்கள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

பழைய பாடத்திட்டத்திலும் புதிய பாடத்திட்டத்திலும் நடைபெறவுள்ள இப்பரீட்சை மேற்பார்வை மற்றும் சம்பந்தப்பட்ட வேலைகளுக்கென ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் உட்பட 50 பேர் ஈடுபட்டுள்ளதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (சு-164)

# எரிபொருள் நிலையங்கள் மீண்டும் திறக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம் மார்ச் 29
வடபிராந்தியத்தில் மூடப்பட்டிருந்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிலையங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் வட பிராந்தியத்தில் உள்ள பெரும்பான்மையான எரிபொருள் நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

மொத்தம் 117 எரிபொருள் நிலையங்களில் 20 சத வீதமானவை தற்போது திறக்கப்பட்டுள்ளன.

(சு-3)

# 14 போராளிகள் நினைவாக நாடக அரங்கு - நினைவு மண்டபம்

புதுக்குடியிருப்பு மார்ச் 29
வீரமரணம் அடைந்த 14 போராளிகளின் நினைவாக புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய வளவில் நாடக அரங்கும், நினைவு மண்டபமும் அமைக்கப்படவுள்ளன.

புதுக்குடியிருப்பு கிழக்கு கிராமோதய சபைச் செயலாளர், திரு. வீ. கனகசுந்தரசுவாமி, புதுக்குடியிருப்பு பிரசைகள் குழுச் செயலாளர் திரு. தா. சண்முகநாதன் ஆகியோர் இது குறித்து அபிப்பிராயம் தெரிவிக்கையில், சென்ற ஆண்டே நாம் இதற்காக தீர்மானத்தை மேற்கொண்டோம். ஆனால் அமைதிப்படையின் நெருக்குதல் காரணமாக இதனை நிறைவேற்ற முடியாமல் இருந்தது.

இப்படியான நாடக அரங்காலும் ஞாபகார்த்த மண்டபத்தினாலும் இப்பகுதியில் உள்ள கலைஞர்களும் மக்களும் பெரிதும் பயன் பெறுவர் என்றனர்.

(இ-126)

# தமிழர் ஆசிரியர் சங்க கிளைகள் புனரமைப்பு

தாளையடி, மார்ச் 29
அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நாடுபூராகவும் உள்ள அதன் கிளைகளைப் புனரமைப்பு செய்து வருகின்றது.

கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையினால், சங்கத்தின் செயற்பாடுகள் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தடைப்பட்டிருந்தன.

அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மலையகம் கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள கிளைகளை ஏற்கனவே புனரமைப்பு செய்துள்ளதாக, பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

எதிர்வரும் யூன் மாதமளவில் அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்தார். (சு-144)

## நிவாரணம்

சுயதொழில் முயற்சிக்கான நிவாரணம் ரூபா நாளாயிரம் நெடுந்தீவு மக்களுக்கு விரைவில் கிடைக்கும் எனத் தெரிகிறது. தற்போது 750 பேருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது மேலும் கூடுதலாக 250 பேருக்குக் கிடைக்கவுள்ளது. இந்த அறிவிப்பை அடுத்து நெடுந்தீவில் சுமார் ஆயிரம் பேர் சுயமுயற்சிக்கான நிவாரணம் பெறவுள்ளனர். (க - 111)

## சமயப் பிரசங்கம்

குரும்பசிட்டி வளர்மதி சனசமூகநிலைய சைவசமய அபிவிருத்திக் குழுவினால் வாரந்தோறும் திங்கள், வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனை வழிபாடும், மாதத்தில் ஒருமுறை சமயப் பிரசங்கமும் நடத்தப்பட்டு வருகின்றது.

இவ்வொழுங்கில் பங்குனி மாதத்துக்கான சமயப் பிரசங்கம் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியர் திருவாளர் ச. நடராசாவினால் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய முன்றலில் நடத்தப்படவுள்ளது. (க)

# பனைஅபிவிருத்தி சபை நடத்தும் பனைவள ஆய்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29
பனை அபிவிருத்தி சபை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி சபையின் அனுசரணையுடன் பனைவள அபிவிருத்தி ஆய்வுகளைத் தொடங்கியுள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று இவ்வாறு கூறுகின்றது.

பனை மரங்களின் எண்ணிக்கை, அவற்றின் தன்மைகள், அவற்றின் நிலப்பரப்பு தொடர்பாகவும் பனையை நம்பி வாழும் குடும்பங்களின் சமூக பொருளாதார நிலமைகளைப் பற்றியும் ஆய்வுகள் வெளிக்களத் தகவல்களின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உதவி அரசாங்கப் பிரிவுகள், கிராம சேவகர் பிரிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இவ்விரு ஆய்வுகளும் திட்டமிடப்பட்டுள்ளன என்று அறிக்கை கூறுகின்றது.

மேலும், பனம்பொருள் சந்தைப்படுத்தல், அதனுடன் தொடர்பான குடிசைக் கைத்தொழில்களின் வளர்ச்சி, பெண்களின் பங்களிப்பு, பனம்பொருள் அபிவிருத்தியில் தொழில் நுட்பத்தின் பங்களிப்பு முதலான விடயங்கள் பற்றியும் ஆய்வுகள்தொடங்கியுள்ளன,

திட்டமிடப்பட்டுள்ள ஆய்வுகள் பனைவள அபிவிருத்தியை எதிர்காலத்தில் வழிநடத்த உதவும் என்று அறிக்கை கூறுகின்றது. (க)

## அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், மார்ச் 29
வயாவிளான் மத்திய மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்கம் பாடசாலையில் ஒரு வழிபாட்டு நிலையத்தையும் திறந்தவெளி அரங்கையும் நிர்மாணித்து உதவ முன்வந்துள்ளது.

31 ஆம் திகதி சனிக்கிழமை இவற்றுக்கான அடிக்கல் நடும் வைபவம் நடைபெறும் யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி. திலகவதி பெரியதம்பி வழிபாட்டு நிலையத்துக்கான அடிக்கல்லையும் மருதனாமடக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரம் திறந்தவெளி அரங்குக்கான அடிக்கல்லையும் நடுவார்கள். [க]

# வீதித் திருத்த வேலை தாமதம்

யாழ்ப்பாணம் மார்ச் 29
வீதிகளைத் திருத்தும் வேலைகளில் தாமதம் ஏற்படுவதற்கு கல் தட்டுப்பாடு, வாகனம் இல்லாதகுறை தொழிலாளர் பற்றாக்குறை ஆகியவையே பிரதான காரணங்கள் ஆகும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் உதயனுக்கு மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 9 பிரதான வீதிகளைத் திருத்துவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைகளே தாமதம் அடைந்து வருகின்றன.

மற்றும் சில வீதிகளில் கற்கள் குவிக்கப்பட்ட நிலையில் உள்ளன. ஆனால் உடனடியாக வேலையை ஆரம்பிக்க முடியாத நிலை இருந்து வருகிறது. (இ-5)

## நாணய மாற்று விகிதம்

27-3-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|
| 100 இந்திய ரூபா | 233.31 | 234.28 |
| 100 அமெரிக்க டொலர் | 3997.35 | 4002.65 |
| 100 ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6460.87 | 6490.02 |
| 100 ஜேர்மன் [illegible] | [illegible] | [illegible] |
| 100 பிரெஞ்சு பிராங் | 688.38 | 702.34 |
| 100 ஜப்பானிய யென் | [illegible] | [illegible] |

## வாசகர் திருமுகம்

### வீதிகள் நிலைமை! அதிகார சபையின் பதில் இதோ

வீதிகளின் அவல நிலை குறிப்பிட்டு அனேகமாகத் தங்கள் பத்திரிகையில் வாசகர் கடிதங்கள் வெளிவருவதைக் கண்ணுற்றுள்ளோம் வீதி அபிவிருத்தி அதிகார சபை உரிய நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. இவ்வாண்டு தைமாதம் முதல் வீதி அபிவிருத்தி அதிகார சபை A, B வகுப்புகளைச் சேர்ந்த வீதிகளுக்கே மட்டும் பொறுப்பாக உள்ளது என்பதை தங்கள் பத்திரிகை மூலம் வாசக நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம் எமது பொறுப்பிலிருந்த C, D வகுப்புகளைச் சேர்ந்த வீதிகள் யாவும் தை மாதம் முதல் வட- கிழக்கு மாகாணசபையின் கீழ் இயங்கும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளன.

புனருத்தாரண புனர்நிர்மான வேலைத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ள வீதிகளில் மட்டுமே இவ்வாண்டும் அனேகமாக அடுத்த ஆண்டும் எமது நிறுவனத்தில்பாரிய திருத்தவேலைகளை மேற்கொள்ளப்படும் என்பதையும் தங்கள் வாசக நேயர்ளுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

-சு. பாலேந்திரா
மாகாணப் பணிப்பாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
யாழ்ப்பாணம்.

### நிவாரண மோசடிகள்

கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லைக் கிராமமான புன்னை நீராவிக் கிராமத்தில் 1989ஆம் ஆண்டு வரட்சி நிவாரணமாக வரட்சி முத்திரைகள் வழங்கப்பட்ட போது பல மோசடிகள் செய்யப்பட்டன. கிராமத்தில் இல்லாதவர்கள் வெளி நாட்டில் இருப்பவர்கள் பெயரில் முத்திரைகள் பெறப்பட்டது ஆனால் கிராமத்தில் வசிப்பவர் சிலருக்கு வரட்சி முத்திரைகள் வழங்கப்படவில்லை.

இது தவிர, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன் மனைவியர்க்கும்,கிராமத்தில் இல்லாத பலருக்கும் அக் கிராமத்தில் வசிப்பவர்க்கும் மீளக் குடியமர்தல் நிவாரணம் புனர் வாழ்வு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளத கிராம மக்கள் பேசிக் கொள்கிறார்கள் இதைப்பார்க்கும் போது சில நாட்களின் முன்பு உதயனில் வெளி வந்த கொள்ளிக்கண்ணரா காதிர் தலையங்கம் நினைவுக்கு வருகின்றது.

-சுரேஸ்
புன்னை நீராவி

### மணிக்கூண்டு கோபுரம்

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் யாழ்ப்பாண மணிக்கூண்டுக் கோபுரத்தின் கதவு உடைந்து விட்டது. உடைந்த இக்கதவின் மூலம் உட்பிரவேசிக்கும் மாணவர்கள் அங்கிருக்கும் படிகளில் ஏறி விளையாடுகின்றனர். இதனால் விபத்துக்கள் ஏற்பட இடமுண்டு மாநகரசபை இதைக் கவனிக்குமா?

-ஏ. சுப்பிரமணியம்
யாழ்ப்பாணம்.

## ரமழான் சிந்தனை நோன்பின் சிறப்பு

''ஒருவர் எவ்வித காரணமுமின்றி ரமழான் மாதத்தில் ஒரு நோன்பை கைவிட்டு விட்டு அதற்குப் பரிகாரமாக ரமழான் அல்லாத மாதத்தில் ஆயுள் முழுவதும் நோன்பு நோற்றாலும் அதற்கு ஈடாக முடியாது'' என்று நபி(ஸல்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அப்துல்லாஹ் இப்னு அவ்ப் [ரலி] அவர்கள் நோன்பு சமயம் அவர் மகன், நோன்பு திறக்கக் கஞ்சியைக் கொண்டு வந்து வைத்தார்கள். அப்போது அவர் தந்தை சிறு குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுதார்கள்.

அவர்மகன் காரணம்கேட்டபோது, 'என் தோழர்களில் பலர் மரணமாகிய பின் அணிவிக்கப்படும். வெள்ளை நிற (கபன்) துணிகளுக்குக் கூட சரிவர இல்லாமல் சிரமப்பட்டனர். ஆனால் நான் செல்வச் செழிப்பில் இருக்கின்றேன். இறைவன் எங்கே நன்மைக்குப் பதிலாக இங்கயே கூலி கொடுத்து விடுவானோ என பயப்படுகிறேன் கஞ்சியை எடுத்துக் கொண்டு போய் விடு' என்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை,
நீர்வேலி.

## பட வரைஞர்களுக்கான விண்ணப்பங்கள்

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைப் பிரதேசத்தில் பட வரைஞர்களாகக் கடமையாற்ற விரும்புபவர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 10 - 04 - 1990 ஆம் திகதி நண்பகல் வரை ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

1. தொழில் நுட்பக் கல்லூரியில் பட வரைஞர்களுக்கான பட்டப் படிப்பை முடித்தவர்களாக இருத்தல் வேண்டும்.
2. பட வரைஞர் தொழிலில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. நகர அபிவிருத்திச் சட்ட திட்டங்கள் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

திருமதி தனேஸ்வரி பாஸ்கரன்,
விசேட ஆணையாளர்,
வலி. கிழக்குப் பிரதேசசபை,
நீர்வேலி.

வலி. கிழக்குப் பிரதேசசபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி
23 - 03 - 1990 [சி-4092]

## நீங்களும் பட்டதாரியாகலாம்

A/L 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும்; பயிலுநர், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் பட்டதாரியாவதற்கு அரிய வாய்ப்புண்டு.

பேராதனை பல்கலைக் கழகத்தில் (வெளிவாரியாகப்) பதிவு செய்து கொள்ளலாம்.

பதிவுகளை எமது நிறுவனத்தில் 10 - 04 - 90 வரை செய்து கொள்ளலாம். இதற்கு முன்னரே விண்ணப்ப படிவங்களையும் விபரங்களையும் பெற்றுக் கொள்ளவும்.

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். [சி-4175]

## பரிசளிப்பு விழா

கலாலயாவில் 88ம், 89ம் ஆண்டுகளில் டிப்ளோமா மனைப் பொருளியல் பயிற்சி நெறி பயின்ற மாணவிகளுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 01 - 04 - 90 ஞாயிற்றுக்கிழமை 2.00 மணிக்கு மேற்படி நிறுவனம் அமைந்துள்ள யாழ். விக்டோரியா வீதியில் நடைபெற உள்ளது. சான்றிதழ் பெறவிருக்கும் மாணவிகள் தவறாது சமூகமளிக்கவும்.

நிர்வாகி

[சி-4159]

# ஆப்கன் பிரச்சினைக்கு தீர்வு காண 'சமாதான முன்னணி' அமைப்பு!

## ஜனாதிபதி நஜிபுல்லாவின் இறுதி முயற்சி!

காபூல் மார்ச் 28

சமாதான முன்னணி என்ற அமைப்பு ஒன்றை ஆப்கன் ஆளும் மக்கள் ஜனநாயகக் கட்சி ஆரம்பிக்க உள்ளது.

இதன் மூலம் ஆப்கனின் 11 ஆண்டு கால சிவில் யுத்தத்துக்கு முடிவு கட்டடாக்டர் நஜிபுல்லா முயற்சிகள் எடுத்து வருகின்றார்.

சமாதான முன்னணியின் ஆரம்பக் கூட்டம் வெகுவிரைவில் நடைபெற உள்ளது. வெளிநாட்டில் தஞ்சம் புகுந்துள்ள முன்னாள் ஆப்கன் மன்னர் ஸ ஹிர்ஷாவை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் படி ஆப்கன் ஜனாதிபதி நஜிப் அழைக்கிறார்.

இந்த முன்னணியில் 9 அரசியல் கட்சிகளும் ஐந்து சமூக அமைப்புக்களும் அங்கம் வகிக்கின்றன. ஆட்சிப் பொறுப்பைக் கையளிக்க தற்போதைய நஜிபுல்லா அரசு இப்புதிய முன்னணியை உருவாக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## கராஜ் இருப்பின் கார்பாவனை; மாலைதீவு அரசு நிபந்தனை!

மாலே, மார்ச் 28

கராஜ் வைத்திருப்பவர்களுக்கே கார் சொந்தமாக வைத்திருக்க அனுமதி வழங்கப்படும் என்ற சட்டத்தை மாலைதீவு அரசு பிறப்பித்துள்ளது.

மாலைதீவு தலைநகர் மாலேயில் தனியார் கார்களைச் சொந்தமாக வைத்திருப்பது ஏற்கனவே தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் புதிய சட்டம் கார்களை வைத்திருக்கும் வர்த்தக நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்திருக்கிறது.

இந்த நிறுவனங்கள் தங்களிடம் காரை நிற்பாட்டும் கராஜ்கள் இருப்பதாக நிரூபிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (எ)

## கல்லாப்பெட்டி சிங்காரம் காலமானார்

சென்னை. மார்ச் 28

நகைச்சுவை நடிகர் கல்லாப்பெட்டி சிங்காரம் மாரடைப்பால் மரணமானார் என்று அறிவிக்கப்படுகிறது.

அவருக்கு வயது 60 டாலிங் டாலிங், இன்று போய் நாளை வா, சுவர் இல்லாத சித்திரங்கள் உட்பட பல படங்களில் இவர் நடித்திருக்கிறார்

## மாஸ்கோவில் ரோட்டரிக் கழகம்

மாஸ்கோ, மார்ச் 28

மாஸ்கோவில் முதலாவது ரோட்டரிக் கழகம் இவ்வாரம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

அதன் பின்னர் சோவியத்தின் ஏனைய நகரங்களிலும் அதன் கிளைகள் ஆரம்பிக்கப்படும். (எ)

## இராணுவச் செய்மதி

கேப்கனவெரல், மார்ச் 28

ஏழாவது இராணுவ செய்மதியை அமெரிக்கா கடந்த ஞாயிறு வானவெளிக்கு அனுப்பியது.

டெல்டா ரொக்கெட் மூலம் இச்செய்மதி அனுப்பப்பட்டது. (எ)

## மரண தண்டனை விதிக்கப்பட்ட இளைஞனின் உயிரைக் காக்க அன்னைதிரேஸா கருணைமனு!

ஸ்கிரமண்டோ, மார்ச் 28

மரணதண்டனை விதிக்கப்பட்டு உள்ள 37 வயதான இளைஞர் ஹரிஸ் என்பவரின் உயிரைக் காப்பாற்றும் படி 79 வயது அன்னை திரேசா கடந்த திங்கள் கலிபோர்னியோ ஆளுநருக்கு அவசர வேண்டுகோள் விடுத்தார்.

1979 ஆம் ஆண்டில் இரண்டு இளைஞர்களைக் கொலை செய்ததற்காக ஹரிஸுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி அவருக்கு காஸ் அறையில் மரணதண்டனை நிறைவேற்றப்படவுள்ளது.

கலிபோர்னியோ ஆளுனர் டுக்மெஜானுக்கு தனது வீட்டில் இருந்து தொலைபேசி மூலம் கருணைக் கோரிக்கையை அன்னை திரேசா விடுத்தார்.

'' உங்கள் நிலையில் யேசு பிரான் இருந்தால் என்ன செய்வாரோ அதையே நீங்களும் செய்யுங்கள் '' - இதுவே அன்னையின் கருணைமனுவாகும்.

ஆளுனர் பதிலளிக்கையில், '' இம் மரண தண்டனையை நிறைவேற்றும் படி கலிபோர்னியோ மக்கள் இரு முறை வாக்களித்து விட்டனர். சட்டத்தை நிலைநாட்ட நான் விசுவாசப் பிரமாணம் எடுத்துள்ளேன் '' - என்று அன்னையிடம் சொன்னார். (எ)


## Computer Instructors

A leading private School in Jaffna has Vacancies for Computer Instructors.

A thorough knowledge in dBASE III + and Lotus 1, 2, 3 is essential.

An attractive salary will be paid for the right person.

Apply to: No:
622, C/o UTHAYAN,
Jaffna.

[C-4180]



# இலங்கை வங்கி

BANK OF CEYLON

## யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, 476 & 476ஏ யில் இருக்கும் இலங்கை வங்கி மேற் தரக்கிளை கட்டிடத்திற்கு உத்தேச இரண்டு தள புதிய கட்டிடப் பகுதி கட்டுவதற்கான ஒப்பந்தக்காரர்களின் முற்தகைமை

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, 476 & 476ஏ யில் இருக்கும் இலங்கை வங்கி மேற்தரக்கிளைக் கட்டிடத்திற்கு உத்தேச இரண்டு தள புதிய கட்டிடப் பகுதியை ஒரு வருடத்திற்குள் கட்டிமுடிப்பதற்கான ஒப்பந்தக்காரர்களின் முற்தகைமையை அறிவதற்கு இலங்கை வங்கி விரும்புகின்றது.

முற்தகைமையை தெரிவிக்க விரும்புகிறவர்கள் பின்வரும் சான்றுகளைக் காட்ட வேண்டும்.

1. இலங்கையில் வியாபாரப் பெயர்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
2. கடந்த மூன்று வருடங்களில் ரூபா 12 மில்லியன் மொத்தப் பெறுமதியுடைய இரண்டு தள அலுவலகக் கட்டிடங்களை அல்லது இரண்டு தள கட்டிட அலுவலகங்களுக்கு புதிய கட்டிடப் பகுதியை திருப்திகரமாக பூர்த்தி செய்திருக்க வேண்டும், என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
3. விண்ணப்பகாரர் ரூபா 4 மில்லியன் பெறுமதியுடைய கட்டிட வேலையை மேற் கொள்வதற்கு நிதியியல் ஆற்றலை உடையவர் என்பதை வங்கியர்களிடம் இருந்து கடிதங்கள் மூலம் நிதியியல் உறுதிப்பாட்டை காட்ட வேண்டும்.
4. தேவையான ஊழியர்கள், இயந்திர சாதனக் கருவிகள் கிடைக்கப் பெற்றதாக உறுதிப்படுத்த வேண்டும்.
5. தொழில் நுட்ப ஆற்றல்.

முற்தகைமைகளை ஒப்புவிக்க விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் முற்தகைமை வினாக் கொத்துக்களை திருப்பிச் செலுத்தப்படாத கட்டணமாக ரூபா 250/- செலுத்தியதன் பின் வங்கியின் அலுவல்கள் நேரங்களில் இலங்கை வங்கி ஆதனங்கள் பகுதி முகாமையாளரிடமிருந்து (தொலை பேசி இல. 544310) 1990-04-20 வரை பெற்றுக் கொள்ளலாம்.

இந்த வங்கியின் அலுவல்கள் நேரங்கள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| திங்கட் கிழமை | — 9.00 முற்பகல் | — | 1.00 பிற்பகல் |
| செவ்வாய்க் கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை | — 9.00 முற்பகல் | — | 1.30 பிற்பகல் |

பூர்த்தி செய்யப்பட்ட முற்தகைமை வினாக்கொத்து, இரு படிகளில் ''யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, 476 & 476ஏ யில் இருக்கும் இலங்கை வங்கி மேற்தரக் கிளைக் கட்டிடத்திற்கு உத்தேச இரண்டு தள புதிய கட்டிடப் பகுதி கட்டுவதற்கான ஒப்பந்தக்காரர்களின் முற்தகைமை'' என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிட்டு தலைவர் கேள்வுச் சபை அமைச்சு, மே/பா முகாமையாளர், இலங்கை வங்கி ஆதனங்கள் பகுதி, 23ம் தளம், தலைமை அலுவலகக் கட்டிடம், 75 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு -1 க்கு முகவரியிட்டு பதிவுத் தபாலில் 1990-05-04 இல் காலை 10 மணிக்கு முன்னர் சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும். அல்லது ஆதனங்கள் பகுதியில் இருக்கும் கேள்வுப் பெட்டியில் 1990-05-04 இல் காலை 10 மணிக்கு முன் வைப்பிடலி வேண்டும்.

இலங்கை வங்கி,
புதிய தலைமைக் கட்டிடம்,
75, ஜனாதிபதி மாவத்தை,
கொழும்பு - 1.

பொது முகாமையாளர்
இலங்கை வங்கி


## இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து



### ஜெ. ஜெசிகரன்

பாண்டியந்தாழ்வைச் சேர்ந்த ஜெயம் - ஜீவிதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜெசிகரன் தனது இரண்டாவது பிறந்த தினத்தை 29 - 03 - 1990 அன்று தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை ஞானப்பெற்றோர், குவைற்றில் இருக்கும் அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, அம்மய்ய, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அன்ரிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

[12227]

## ஓராண்டு நினைவஞ்சலி



குரும்பசிட்டி
### அமரர் செல்லையா நவரத்தினம்
[நியூ அம்பாள் ஸ்ரோர், உடையார்கட்டு]


திதி: 29 — 03 — 1990

ஆண்டொன்று கழிந்ததோ
அன்புகூர்ந்து அழுகின்றோம்
உன் நினைவு மாறவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

அன்பு மனைவி:
தர்மவதி - நவரத்தினம்,
பிள்ளைகள்.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை. (2982)

## விண்ணலங்கரித்த 31ஆவது தின நினைவு



மண்ணில்:
20 - 10 - 1970

விண்ணில்:
27 - 02 - 1990

### செல்வன் வயித்தியாம்பிள்ளை அன்ரன் (திரவியம்)

வாழ்விற்கு ஒளியென வந்த திரவியமே!
வாழாது வெறுப்புற்றே நீ சென்றனையோ?
வானதேவன் அழைப்புக் கேட்டதினால் - இன்று
விண்ணலங்கரிக்க நீ சென்றனையோ
மரணத்தினால் ஒன்றும் நீ அழிந்திடவில்லையே
மனதினிலென்றும் நீ வாழ்வதுமுண்மையே!

(31 வது நாள் கிரிகைகள் 29 - 03 - 1990 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்).

கிளாலி,
எழுதுமட்டுவாள்.

பெற்றோர், சகோதரர்.
(12231)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ திறப்பு விழா ★
**QUICK TRAVELS**
U. G. 117. People's Park Complex,
Gas Work Street, Colombo-11
T. P. 438394

உங்களது தேவையை பூர்த்தி செய்வதே எங்களது சேவை, சகல நாடுகளுக்குமான விசா விமான டிக்கட் புண்ணிய ஸ்தல யாத்திரை மற்றும் உங்களது வெளிநாட்டு பயணங்களுக்கான சகல ஏற்பாடுகளும் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். ஒரு முறை விஜயம் செய்து உண்மையை தெரிந்து கொள்ளுங்கள்.

★ உங்கள் எல்லோரையும் அன்புடன் அழைக்கும் ★
N. V. Yohanathan (Yoga) & Staffs
யோகநாதன் (யோகா) மற்றும் உதவியாளர்களும்
[2984]

விக்னா
டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
கலை, வர்த்தக வகுப்புகளுக்கு
தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
**90 DAY CLASSES**
(8.00 — 1.00)
பிரிவு 1 ஆரம்பமாகிவிட்டது
பிரிவு 2 ஆரம்பம்: 2 - 4 - 90 காலை 8.00
நேர சட்டவணை:
8.00 - 9.00 வர்த்தகம் / இ. நாகரிகம்
9.00 - 10.30 பொருளியல்
10.30 - 12.00 கணக்கியல் / தமிழ்
12.00 - 1.00 அளவையியல் / அரசியல்
மு. குறிப்பு: I தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து போதிக்கும் ஒரே நிறுவனம்.
II வினா, விடை வகுப்புகள் இலவசமாக நடாத்தப்படும்.
III விடுதி வசதி செய்து கொடுக்கப்படும். [சி-4162]

வெளிவந்துவிட்டது!
பிரதிக்கு முந்துங்கள்!!

பங்குனித் திங்கள் இதழ்
அம்பாள் அடியார்களே!
உங்களுக்கோர் அருவிருந்து!!
ஞானக்கதிர்
அன்பு அறநெறி - ஆன்மீகம்
இம் மாதக் கதிரிலே!...
★ அம்பாளின் தோற்றம்
★ அம்பாளை வழிபடும் முறைகள்
★ அம்பாளுக்குரிய விரத நாட்கள்
★ அம்பாளுக்குரிய நிவேதனப் பொருட்கள், புஷ்பங்கள், நிறங்கள், இரத்தினங்கள், இலைகள் பற்றிய விளக்கம்.
அம்பாளின் திருத்தலங்களான:
☐ இணுவில் சிவகாமியம்பாள் ஆலயம்
☐ சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயம்
☐ பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம்
☐ திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம்
— ஆகியவற்றின் வரலாறுகளும், அற்புதங்களும்.
★ பகவான் சாயிபாபாவின் தினசரிப் பிரார்த்தனை
★ காட்டுச் சாமியாரின் ஸ்பரிச தீட்சை
★ இன்னும் பல ..........!
விலை ரூபா 5/- மட்டுமே!
[சி-4086]

# ஆயுள் வேத வைத்தியத் துறை விஸ்தரிப்புக்கு மக்கள் வங்கி கடன்

யாழ்ப்பாணம், மார்ச் 29 ஆயுள்வேத வைத்தியத்துறையை விஸ்தரிக்க இரண்டு லட்சம் ரூபா வரையில் கடன் வழங்க மக்கள் வங்கி முன்வந்துள்ளது.

ஆயுள்வேத வைத்தியத்தில் சித்தி அடைந்தவர்கள் வைத்தியசாலை ஒன்றை அமைக்க இரண்டு லட்சம் ரூபா வரையில் நீண்ட தவணையில் கடன் வழங்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது,

புதிய மாணவர்கள் தம் கல்வியை விருத்திசெய்ய 30 ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கப்படவிருக்கிறது.

(இ - 3)

# மாணவர் கல்வி வளம் பெற பெற்றோர் பங்களிப்பு அவசியம்

## பரிசு வழங்கும் வைபவத்தில் உரை

கல்வி கற்கும் மாணவர்களுக்கு போட்டிப் பரீட்சைகளை நடத்துதல் மாதிரிக் கேள்வி பதில்களை கற்பித்தல் போன்றகாரியங்களை செய்ய வேண்டும்.

போட்டியாக இல்லாது உதவியாகக் காரியங்கள் செய்து கல்வியை வளம்படுத்துவதில் பெற்றோர் தமதுபங்களிப்பைச்செய்ய வேண்டும்.

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் புலவர் சு. சுந்தரம் பிள்ளை சுழிபுரம் பகுதியில் இவ்வாண்டு சித்தியடைந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் மாணவர்களுக்கு பரிசுவழங்கும் வைபவத்திற்கு தலைமை தாங்கிப் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலயத்தில் இப்பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது.

போட்டியில் தெரிவானஏழு மாணவர்களுக்கும் இளைப்பாறிய அதிபர் திரு. எஸ் வேலாயுதம்பிள்ளை பரிசு நூல்களை வழங்கினார்.

(க-82))

## பணிமனை இடமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 29 யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பணிமனை கல்வித்திணைக்களத்தில் இருந்து, பெப்ரவரி மாதம் முதல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் தலைவராக யாழ். பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பியும், செயலாளராக, கல்விஅதிகாரி திரு. அ. தங்கராசாவும் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இச்சங்கம் நடத்திய க. பொ. த. ப. (சா. த.) வகுப்புக்கான தமிழ்மொழி முன்னோடிப் பரீட்சையில் 104 பாடசாலைகளில் இருந்து 5000 மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

இப்பரீட்சையின் பெறுபேறுகள் அனைத்தும் பரீட்சைச் செயலாளர் திரு. ப. சிவஞான சுப்பிரமணியத்தால் சென்ற வாரம் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. பரீட்சையில் திறமைச் சித்தி தரம் எய்தியவர்களுக்குச் சான்றிதழ்களும், அதிவிசேட தரம் எய்தியோருக்குப் பரிசில்களும் வழங்கப்படும்.

(க)

## முகாமைத்துவ பயிற்சி

பருத்தித்துறை, மார்ச் 22 வடமராட்சிக் கோட்டக் கல்விப் பிரிவுக்குள் உள்ள சகல பாடசாலைகளிலும் நிர்வாகப் பொறுப்பு வகிப்போருக்கான முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி முதலாந்தவணை விடுமுறையின் போது வழங்கப்படவுள்ளது. பாடசாலை உஅதிபர், பகுதித்தலைவர், பாடஇணைபாளர், தர இணைப்பாளர் ஆகிய பதவிகளை வகிப்போரின் பட்டியலை வடமராட்சிக் கோட்டக் கல்விப் பணிமனை திரட்டி வருகிறது என வடமராட்சி கோட்டக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் தெரிவித்துள்ளார்.

(க-118)

சைவப் பிரகாச வித்தியாசாலை

# குழாய்க் கிணறு அமைத்தது சகலருக்கும் முன்னுதாரணம்

''ஆசிரியர், பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் அனைவரும் இணைந்து கல்வித் திணைக்களத்தின் உதவியை எதிர்பார்த்திராது சுய உதவி, சுய உழைப்பின் மூலம் குழாய்க்கிணறு அமைத்துசகலருக்கும்முன்னுதாரணம் ஒன்றைஏற்படுத்தியுள்ளார்கள்.

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை மெய்வலுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். கோட்டக் கல்வி அலுவலர் திரு. சி. தியாகராசா இவ்வாறு கூறினார்.

இப்போட்டியில் வண்ணை வடக்குக் கொத்தணி அதிபர் திருமதி தி நாகராசா வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

போட்டியில் நீல இல்லம் முதலாம் இடத்தையும் சிவப்புஇல்லம் இரண்டாம் இடத்தையும் பச்சைஇல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

சிரமதான முறையில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணற்று நீர் விநியோகம் அன்று ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஒத்திவைப்பு

இம் மாதம் 30 ஆம்திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ள இருந்த புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா தமது விஜயத்தை ஒத்திப் போட்டுள்ளார் என யாழ் செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-6-111)

# அந்நியர் வருகையால் எமது கலாசாரம் சீரழிந்தது

## புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளர் உரை

யாழ்ப்பாணம் மார்ச் 29 ''நாம் ஒரு தேசிய இனம். ஆனால் எமது கலாசாரம் அந்நியர் வருகையினால் சீரழிக்கப்பட்டுவிட்டது. இதைச் செம்மைப்படுத்த வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு.''

வீரமரணம் அடைந்த றோசான்கரி, பவான் ஆகிய போராளிகளின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. தீபன் குறிப்பிட்டார்.

இந்த கூட்டம் அல்வாய் கிழக்கு தில்லையம்பல பிள்ளையார் ஆலைய முன்றலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. வி. தரிசனம் தலைமை வகித்தார்.

அவர் மேலும் பேசுகையில் எமது மண்ணின் சடந்தகால நிகழ்கால நிகழ்வுகளை வெளிக்கொணரும் படைப்புகள் வெளிவர வேண்டும். இவற்றை ஊக்குவிக்க நாம் பல்வேறு வகையில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றோம் என்று குறிப்பிட்டார்.

இவ் வைபவத்தில் திரு. எஸ் காந்தராசா, மகேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர்.

இறுதியில் வல்வைநாடக மன்றத்தின் மண்ணின் மைந்தன், கரவை கலாசார அவையின் பாப்பாக்களின் பிரகடனம் என்ற நாடகங்களும், யுத்தகளத்தில் மடிந்த இரத்த கனிகள் என்ற கவியரங்கும் இடம்பெற்றன. (க-9)

**மக்கள் வங்கி**
**அடகு நகைகள் மீளளித்தல்**
யாழ்ப்பாண மாவட்டம்

பின்வரும் கிளைகளில் அடகு வைத்து, மீளப் பெறுவதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அருகில் இருக்கின்ற பொலிஸ் தொடர்மாடிக் கட்டடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்,

| | | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|---|
| 1. | ஊர்காவற்றுறைக்கிளை (22 - 09 - 1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 29 - 03 - 1990 — | வியாழன் |
| 2. | பருத்தித்துறைக் கிளை (15 - 09 - 1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 29 - 03 - 1990 — | வியாழன் |
| 3. | வல்வெட்டித்துறைக்கிளை (13 - 10 - 1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 29 - 03 - 1990 —<br>30 - 03 - 1990 — | வியாழன்<br>வெள்ளி |
| 4. | நெல்லியடிக் கிளை (15 - 09 - 1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 30 - 03 - 1990 —<br>31 - 03 - 1990 — | வெள்ளி<br>சனி |
| 5. | சுன்னாகம் கிளை (09 - 10 - 1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 30 - 03 - 1990 —<br>31 - 03 - 1990 — | வெள்ளி<br>சனி |
| 6. | காங்கேசன்துறைக் கிளை (22 - 09 - 89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 31 - 03 - 1990 — | சனி |

மேற் குறிப்பிட்ட தினங்களில் காலை 8-30 மணி தொடக்கம் நண்பகல் 1-00 மணி வரை அடகு நகைகள் மீளளிக்கப்படும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமுகந் தந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மற்றைய கிளைகளின் நகைகள் சித்திரை மாதம் 3 ஆம் திகதி முதல் மீளளிக்கப்படும். அது பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்,
பிராந்தியத் தலைமையகம்.
[சி-4093]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் மோசடிகள் எம்மை தலை குனிய வைக்கின்றன

## சுன்னாகம் தபால் அதிபர் உரை

தபாற்சேவையில் இடம்பெறும் மோசடிகள், ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன மலசலகூடம், பாண்கிணறு முதலிய இடங்களில் உடைக்கப்பட்ட நிலையில் வெளிநாட்டுக் கடிதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. இச்சம்பவங்கள் வேறு இடங்களில் இடம் பெற்றாலும் இன்று நாம் மக்கள் முன் தலைக் குனிந்து நிற்க வேண்டியிருக்கிறது, இப்படியான குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டாலன்றி அவற்றைத் தடுத்து நிறுத்துவது முடியாதகாரியம்.

சுன்னாகம் பிரதம தபாலதிபர் திரு. திருநாவுக்கரசு தபால் உத்தியோகத்தர் ஊழியர் மத்தியில் பேசும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது; நாம் நேர்மையைக் கடைப்பிடித்து சேவையின் புனிதத்துவத்தை நிலைநாட்டி விட்டால் எவருக்கும் அஞ்ச வேண்டியதில்லை.

தபாற்சேவை நாட்டின் முதுகெலும்பு. ஒரு நாட்டின் சமூக பொருளாதார, கலாசார தொடர்புகளை இணைக்கும் ஒரு சங்கிலியாக தபாற்சேவை அமைந்து விடுகிறது. இச்சங்கிலி அறக்கப்பட்டு விட்டால் நாடே அழிந்துவிடும்.

எனவே தான் இப்படியான மோடிகளுக்கும் மற்றும் சேவையில் நியமனம், பதவி உயர்வு சம்பந்தமாக இடம்பெறும் ஊழல்களுக்கு மரண தண்டனை வழங்குவதை விட வேறுவழியில்லை.


**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
**யாழ். மாவட்டம்**
**விசேட அறிவித்தல்**

இதுவரை பதிவு செய்யப்படாத யாழ். மாவட்டத்தில் உள்ள சகல தனியார் கல்வி நிறுவனங்களும் (பிரத்தியேக வகுப்புகள் உட்பட) 10-04-90இற்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

செயலாளர்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
நியூ மாஸ்ரர்இன்ஸ்ரிரியூட்
F. M. C. லேன்,
யாழ்ப்பாணம்.
யூனிவேர்சல்
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
றேடியன்ற் கல்வி நிலையம்,
புங்கன்குளம் - அரியாலை,
யாழ்ப்பாணம். [12139]

## ஈராண்டு நினைவஞ்சலி



மண்ணகம்:
25 - 05 - 1947
★●★
விண்ணகம்:
29 - 03 - 1988


**அமரர் சுப்பையா அருள்ராசா**
(தவம்)
(கிராமசேவை அலுவலர், ஈச்சமோட்டை)

அன்புடனே அருள்சொரிந்து எம்மையெல்லாம்
அவனியிலே அஞ்சாமல் வாழ வைத்தோன்
கன்னலுடன் தேன்பாகு கலந்தாற் போன்று
கலையுடனே கவித்திறனைக் கரைத்துத் தந்தோன்
புன்முறுவல் புதிய பொருள் பொதிந்து நிற்க
பூதலத்தில் புகழுடம்பை விட்டுச் சென்றோன்
மன்னவனாம் அருள்ராசின் மதி நலத்தை
மதி தலத்தில் என்றென்றும் மறக்கப்போமோ!

துணைவி, பிள்ளைகள், அன்னை,
சகோதர சகோதரிகள்.

பிளைச்சர் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். [2973]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
14 - 06 - 1924
மறைவு:
20 - 03 - 1988
திதி:
29 - 03 - 1990

**திரு. ஐ. இராசதுரைப்பத்தர்**
அவர்கள்

அன்பால் எம்மை அரவணைத்து
அகிலம் போற்ற வாழச் செய்து
பண்பால் உயர்ந்து நின்ற தந்தையே!
பரிதவிக்கின்றோம் நின் பிரிவால்!!!

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்,

இ. கணேசராசா,
நாச்சிமார் கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (12230)

# மாணவர்கள் ஆரோக்கியம்பெற விளையாட்டு போட்டி உதவுகிறது

## மண்டைதீவு கோட்டக்கல்வி அதிகாரி உரை

மண்டைதீவு, மார்ச் 29 மாணவர்கள் எதிர்காலத்தில் ஆரோக்கியமான உடல் வளத்தைப் பெறவும் சகல வேலைகளிலும் ஊக்கமாக ஈடுபடவும் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் உதவுகின்றன.

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த இல்ல விளையாட்டு போட்டிக்கு பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு பேசிய வேலணை கோட்டக் கல்வி அலுவலக பிரதிப் பணிப்பாளர் திரு. க புலேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு வ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி புலேந்திரன் வெற்றிக்கேடயங்களை வழங்கினார்.

சிவப்பு இல்லம் முதலாம் இடத்தையும் பச்சைஇல்லம் இரண்டாம் இடத்தையும் நீலஇல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

ஆசிரியர் திரு. சேவியதாசன் நன்றி உரை கூறினார்.

(க- 88)

# தற்காலிக அமைதியே நிலவுகிறது எமதுசுதந்திரம் உறுதியாகவில்லை

## மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் உரை

காங்கேசன்துறை மார்ச் 29 "இன்று ஒருவித அமைதி நிலவுவதைவைத்துக்கொண்டு ஏதோ சுதந்திரம் கிடைத்துவிட்டதாக மக்கள் நினைக்கிறார்கள் ஆனால் அப்படி நினைப்பது தவறு. தற்காலிகஅமைதி நிலவுகிறதேதவிர எமது சுதந்திரம் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை"

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதியில் 27 ஆம் திகதி மாலை நடைபெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்துரையாற்றிய வலிகாமம் பகுதி அரசியல் அமைப்பாளர் திரு. ஆஞ்சநேயர் கூறினார்.

திரு சி. கணேஷ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எமது போராட்டப்பாதையில் பல்வேறு அணுகு முறைகளை நாம் கையாண்டாலும் எமது இறுதி முடிவு தமிழ் ஈழமே என்பதை அறுதியிட்டுக்கூறவிரும்புகிறோம். இந்த இலட்சியத்திலிருந்து புலிகள் ஒருபோதும் பின்வாங்க மாட்டார்கள்.

புலிகளின் விடுதலைப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்காவிடில் இன்று தமிழினம் தலைநிமிர்ந்து வாழக்கூடியசூழ்நிலை இருக்குமா? என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

தமிழினம் சிங்களம் பேசும் இனமாக அல்லது பலமொழி பேசும் கலப்புஇனமாகமாறக் கூடியநிலை தான் ஏற்பட்டிருக்கும்.

ஆகவே எமது எதிர்கால சந்ததியின் நல்வாழ்வுக்காகநாம் எம்மையே அர்ப்பணிக்கத் தயாராகியுள்ளோம்.

இப்படி அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர் திரு. க. செல்வநாயகம் உரையாற்றுகையில் எமது விடுதலைப் போராட்டம் உலக ரீதியில் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. கழுத்தில் "சயனைற்" குப்பிகளுடன் தமது உயிரை துச்சமென மதித்து போராடும் விடுதலைப் புலிகள் போன்று உலகில் எங்கும் விடுதலை வீரர்கள் இல்லை. உலகில் 8 கோடிதமிழர் வாழ்கின்ற போதும் தமிழனுக்கு என்று சொந்தநாடு சுதந்திரநாடுஎங்குமேஇல்லை அது இங்குதான் உருவாக வேண்டும். அதற்குநாம் எல்லோருமே போராளிகளாக மாறும்நிலைஏற்படவேண்டும் என்று கூறினார்.

மற்றும்ஆசிரியர் திரு இராஜநாயகம், திரு. ஏ வி. மாணிக்கம், திரு. சுந்தரம் உட்படபலர் உரையாற்றினர். "நடந்து வந்தபாதை" வில்லிசையும், நாடகமும் இடம் பெற்றன.

(இ-68)

## சமாதானவிருது

சர்வதேச புரிந்துணர்விற்கான ஜவகர்லால் நேரு விருது பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத்துக்கு நேற்று வழங்கப்பட்டது. இந்திய ஜனாதிபதி விருது வழங்கினார். (உ-6


A/L விஞ்ஞான மாணவர்களுக்கு

★ அசேதன இரசாயனம் ★
ஆரம்பம்: 31—03—90 Sat & Sun 12.30 → 1.30
ஆசிரியர்: Mr. நாகரட்ணம் B.Sc.

★ வட்ட இயக்கம் ★
ஆரம்பம்: 03—04—90 Mon, Wed & Fri 1.30→3p.m.
தொகையீட்டின் பிரயோகம்
ஆரம்பம்: 03—04—90
Mon. Wed & Fri — 3.00 — 4.30 p.m.
ஆசிரியர்: Mr. கணேசன் (B.Sc.)

3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

[சி-4161]


## விளை. போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 29 துன்னாலை வெலிகன் தோட்ட சர்வோதய சிறுவர் பாடசாலைக்கும் துன்னாலை வல்லியானந்த பிள்ளையார் சர்வதேச சிறுவர் பாடசாலைக்கும் இடையிலான சர்வோதய சங்கத்தால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டி ஏப்ரல் முதலாம் திகதி வல்லியானந்த பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது. (ர-7)

## முல்லைத்தீவில் புத்தாண்டுப் போட்டிகள்

ஒட்டுசுட்டான் மார்ச் 29 முல்லை மாவட்டத்திலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவினர் எதிர் வரும் புத்தாண்டு தினத்தில் பல விளையாட்டுப் போட்டிகளை நடாத்த ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

போட்டிகள் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் நடைபெறுமென கலைகலாசார செயற்குழுப் பொறுப்பாளர் தெரிவிக்கிறார்.

( இ - 113 )


VACANCIES

DRAUGHTSMAN (MECHANICAL)

The successful candidate will join a team of Engineers involved in design fabrication and commissioning of process machinery for the local and foreign market

The job will involve preparing component and assembly drawings of process Machinery and preparing bill of quantities

Candidates to have undergone apprenticeship and possess minimum of 5 years experience in Mechanical Draughting. Ability to design simple machinery will be an advantage

TECHNICAL ASSISTANT (MECHANICAL)

Candidates to have successfully completed special apprenticeship with National Apprenticeship Board or at any recognised institution and have at least 2 years experience in Mechanical fabrication.

The job will involve organising supervising and achieving production targets in a mechanical fabrication shop producing custom built process machinery

Successful candidate will be offered an attractive package

Apply to Managing Director
Promoters Engineering Company Limited,
844, Point Pedro Road,
Nallur, Jaffna.


## மக்கள் முகம்

### சமாதான நீதவான்

யாழ்ப்பாணம் மார்ச் 29 கோப்பாய் வடக்கைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை இராஜரத்தினம் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் யாழ் - மஜிஸ்திரேட் திரு. என். யோகசிகாமணி



முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்,

இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தரான இவர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவராவார்.

( இ - 3 )

# விளையாட்டுப் போட்டிகளால் பல நன்மைகள் உண்டு

## விளையாட்டுப் போட்டியில் உரை

கொடிகாமம். மார்ச் 29 "பாடசாலை விளையாட்டுப் போட்டிகளால் எடுத்தகாரியத்தைத் தொடர்ந்து முடிக்கும் மனோபக்குவம், உடல் உள ஆரோக்கிய விருத்தி முதலிய பல நன்மைகள் ஏற்படுகின்றன".

கொடிகாமம் அரசினர் வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டியில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட ஷ்ப்றா நிதிநிறுவன முகாமையாளர் திரு. செல்லையா ஸ்ரீரங்கநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கொடிகாமம் சொத்தணி அதிபர் திரு. ச. சின்னத்தம்பி பேசும்போது, மாணவரின் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொணர விளையாட்டுப் போட்டிகள் உதவும்" என்று கூறினார்.

அதிபர் திரு. திருநாவுக்கரசு தமது தலைமை உரையில், "இவ்வித்தியாலய ஆரம்பத்தின் 30 ஆம் ஆண்டுப் பூர்த்தியின் போது இப்போட்டியை ஸ்தாபகர் அமரர் செல்லையாவின் நினைவாக நடத்தினோம். அதன் பொருட்டு அன்னாரின் புதல்வன் திரு. ஸ்ரீரங்கநாதனை கௌரவ விருந்தினராக அழைத்து இப்போதைய சந்ததிக்கு அவரை அறிமுகம் செய்தோம்." என்று கூறினார்.

வித்தியாலய அபிவிருத்திச் சபை செயலாளர் பண்டிதர் திரு. வே. நடராசா வரவேற்புரையும் துணை அதிபர் திருமதி. சி நடராசா நன்றியுரையும் வழங்கினார்.

திருமதி இ. ஸ்ரீரங்கநாதன் பரிசில்களை வழங்கினார்.

(க-75

## பாடசாலை அபி. சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29 வண்ணை நாவலர் அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 25 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அதிபர் திரு. ப. சிவஞானசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதிய வருட உத்தியோகத்தர் தெரிவுகள் இடம்பெற்றன. பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ப. சிவஞானசுப்பிரமணியம் (அதிபர்) செயலாளர்: திரு. எஸ். பாலசுப்பிரமணியம், இணைச்செயலாளர்: திரு. என். ஜீவரத்தினம், பொருளாளர்: திரு. மு. சிவபாதம், நிர்வாகசபை உறுப்பினர்கள் பெற்றோர்கள் சார்பில் திரு. கே. இரத்தினம், திருமதி கோபாலகிருஷ்ணன், திருமதி சி. சமேலஸ்வரி, திருமதி பெரியானம்பலம், திருமதி சரஸ்வதி.

ஆசிரியர்கள் சார்பில் திரு. ஐ. துரைராஜா, திரு. செ. சிவஞானசுந்தரம், திருமதி க. அமிர்தலிங்கம், திருமதி யோ. முருகேசு, ப. சொக்கநாதபிள்ளை கூட்டத்தில் பாடசாலைத் தேவைகள் பற்றியும் ஆராயப்பட்டு [illegible] தீர்மானங்களும் [illegible] றப்பட்டன. (க)

# கிளிநொச்சி பாடசாலைகளின் உடற்பயிற்சி போட்டி முடிவு

கிளிநொச்சி மார்ச் 29 கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற் பயிற்சிப் போட்டிகள் கல்வி அதிகாரி திரு. பொன் சபாபதி தலைமையில் பரந்தன் இந்து மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

போட்டிகளின் போது பிரதம விருந்தினராக கிளிநொச்சி பிரதிப் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கல்வி அதிகாரிகள் திரு எஸ். தர்மரத்தினம், திரு. எஸ். கமலநாதன், திரு. எஸ். தனஞ்சயன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில்**

1 ஆம் இடம் கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயம் 2 ஆம் இடம் பரந்தன் இந்து மகா வித்தியாலயம், 3 ஆம் இடம் முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயம்.

**13 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில்**

1 ஆம் இடம் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் 2 ஆம் இடம் பளை மகா வித்தியாலயம், [illegible] தன் [illegible] அரசினர் தமிழ் கலவன் பாடசாலை,

பரந்தன் இந்து மகா வித்தியாலம்.

**17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில்**

1 ஆம் இடம் வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம், 2 ஆம் இடம் கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயம், 3 ஆம் இடம் கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயம்.

**17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில்**

1 ஆம் இடம் பரந்தன் இந்து மகா வித்தியாலயம், 2 ஆம் இடம் புனித திரேசா மகளிர் கல்லூரி, 3 ஆம் இடங்கள் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயம்.

**19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில்**

1 ஆம் இடம் தர்மபுரம் மகா வித்தியாலயம், 2 ஆம் இடம் வட்டக்கச்சி மகா வித்தியாலயம், 3 ஆம் இடம் புனித பற்றிமா றோ. க. த. க. பாடசாலை.

**19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில்**

1 ஆம் இடம் கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயம், 2 ஆம் இடம் பரந்தன் இந்து மகா வித்தியாலயம், 3 ஆம் இடம் பளை மகா வித்தியாலயம் போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கான பரிசில்கள் பிரதமவிருந்தினரால் வழங்கப்பட்டன.

(க-76)


Tender For Furniture

Sealed tenders are invited for the following:

| | | |
|---|---|---|
| 1. | Wooden Glass Fronted Almirahs | — 15 Nos. |
| 2. | Steel Racks | — 10 Nos. |
| 3. | Book Shelves | — 03 Nos. |
| 4. | Office Tables | — 02 Nos. |
| 5. | Executive Cushioned Chairs | — 25 Nos. |
| 6. | Notice Boards | — 05 Nos. |

Drawings and relevant details could be obtained from the Bursar, University of Jaffna from 4-4-90 till 6-4-90 during office hours; on payment of Rs. 200/-, as non-refundable tender deposit and a deposit of Rs. 5,000/- as refundable deposit.

Sealed tenders should be forwarded to the Bursar, University of Jaffna on or before 2.00 p.m. on 12-04-90 indicating No. UJ/PO/T/01/90 on the left hand corner of the envelope.

The tenders will be opened on the same day at 2.30 p.m.

- Registrar

[C-4096]



பிறந்த தின வாழ்த்து



செல்வி தர்ஷிகா (கவித்)

உடுவிலை சேர்ந்த ரகுநாதன் - சுகந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வி தர்ஷிகா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (29 - 03 - 90) வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா (சவூதி) அம்மா, அம்மம்மா, அம்மப்பா, மாமா, சித்தி, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, சுவிஸ் பெரியமாமா, சின்னமாமா, சித்தப்பா, சித்தி, சவூதி ஆசைமாமா, பெரியசித்தப்பா, ஜெர்மன் சித்தப்பா பெரியம்மா, அன்ரா, அன்ரி அத்தை, மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார், தாத்தாமார், பாட்டிமார் அனைவரும் மருதடி விநாயகர் அருள் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

உடுவில், சுன்னாகம். [2949]



31 ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. நா. தம்பிமுத்து
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

பிறப்பு: 24 - 07 - 1929
இறப்பு: 27 - 03 - 1990

அன்பின் உருவாய், பண்பின் இருப்பிடமாய், எம்மை வளர்த்து வாழவைத்த எம் இதய தெய்வத்தின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்
சகோதர சகோதரிகள்,
உறவினர்.

நவாலிதெற்கு,
மானிப்பாய். (12220)



3ஆவது ஆண்டு நினைவஞ்லி



மண்ணுலகில்: 05 - 09 - 1930

விண்ணுலகில்: 29 - 03 - 1987

[770 பாதை இலக்கசேவையில் ஈடுபடும் 29/4445இலக்க மினிபஸ் உரிமையாளரும், தெல்லிப்பழை வாசியுமான]

உயர்திரு இ. கதிரவேல்
(அம்மான்)
அவர்கள்

காலங்கள் தான் மறைந்தோடினாலும்
உன் நினைவுகள் நம்மை வாட்டுதே
உன் பர்சமலர் என்னும் சோலையிலே வளர்ந்த நாம்
இன்று தனிமரமாய் தவிக்கின்றோம் ......
கள்ளமில்லா உன் சொற்சிலம்பம்
எம்மை எல்லாம் சிந்திக்க வைத்தது
உன் கல்லறையின் நினைவுகள்
காலமெல்லாம் எம் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

சந்தை ஒழுங்கை,
தெல்லிப்பழை. [2992]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையான தீர்வு கிட்டும்வரை ஆயுதக் கையளிப்பு இல்லை!

### டாக்டர் பாலசிங்கம் திட்டவட்டமாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

'இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு ஏற்பட்டு, எமது மக்களின் பாதுகாப்பு பரிபூரணமாக உறுதி செய்யப்படும்வரை ஆயுதக் கையளிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை'.

—இவ்வாறு விடுதலைப்புலிகளின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நேற்றைய பத்திரிகைகளில் இலங்கை அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்ததாக வெளியான செய்திகள் குறித்துக் கருத்துக் கேட்டபோதே அவர் இப்படிக் கூறினார்.

ஆயுதங்கள் எமது மக்களின் பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட முக்கிய விடயமாகும்.

இலங்கைஅரசு ஆயுதங்கள், ஆயுதக் கையளிப்பு ஆகியவற்றைப்பற்றிப் பேசுவதை விடுத்து, எமது மக்களின் பாதுகாப்புக் குறித்து விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேசவேண்டும்—இப்படி அவர் மேலும் கூறினார். (உ-9)

### விடுதலைப்புலிகள் - அரசு பேச்சுவார்த்தை:

# முஸ்லிம்களுடன் பேசிய பின்பே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்

### அமைச்சர் ஹமீத் சொல்கிறார்

மட்டக்களப்பு, மார்ச் 29

தமிழீழ விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா அரசுக்கு இடையிலான பேச்சுவார்த்தையில் எடுக்கப்படும் இறுதி தீர்மானம் முஸ்லிம்களுடன் பேசித்தான் எடுக்கப்படும். முஸ்லிம்கள் கருத்துக்கள் புறக்கணிக்கப்பட்டு எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்பட மாட்டாது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தந்த உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் காத்தான்குடி முஸ்லிம்களுடன் நடத்திய சந்திப்பில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சந்தர்ப்பவாதம் மூலம் எமது சமூக உரிமைகளை பாதுகாக்க முடியாது. ஐக்கியமாக செயல்படுவதன் மூலம் தான் பாதுகாக்க முடியும். இல்லையேல் உரிமைகளை இழந்து விடுவோம்.

சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு விடுதலைப் புலிகளுடன் ஆலோசித்து தீர்மானங்கள் எடுங்கள். சமூகபிரச்சினைகள் தொடர்பான புகார்கள் விடுதலைப் புலிகளிடம் தெரிவிக்கப்படுவதால் தான் விசாரணையில் அவர்கள் ஈடுபட வேண்டியுள்ளது. இல்லையேல் அவர்கள் ஈடுபட இடமில்லை-என்றார். (ஒ-21)

# கலாசார சீரழிவுக்கு எம் மண்ணில் நாம் ஒருபோதும் இடமளியோம்

## மகளிர் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 29

ஓர் இனத்தின் தனித்துவத்தைக் காட்டுவது அதன் கலாசாரமே. தமிழினத்தின் தேசியத்தன்மையை குன்றச் செய்யக்கூடிய கலாசார சீரழிவு நிகழ்ச்சிகள் ஒருபோதும் எம் மண்ணில் இடம்பெறாதவாறு நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இப்படியான கலாசார சீரழிவு நடவடிக்கைகளில் எம் மக்களில் ஒரு சிலர் ஈடுபடுவதும், இப்படியான சிந்தனைகளை மக்கள் மனதில் தூண்டிவிடுவதும், ஊக்குவிப்பதும் எத்தனை கேவலமானது.

விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இப்படிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் இப்பொழுதே புத்தாண்டுக் களை தோன்றி விட்டது. ஒவ்வொரு பிரதேசத்தில் உள்ளவர்களும் தத்தமது வாழ்க்கை நிலைமைகளுக்கும் கலாசாரப் பாரம்பரியத்துக்கும் ஏற்ப கலை-கலாசார நிகழ்ச்சிகளை வரும் புத்தாண்டுத் தினத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்து கொண்டு இருக்கிறார்கள்.

இதேவேளை புத்தாண்டு நிகழ்ச்சிகளில் ஒன்றாக 'சித்திரை நங்கை' போட்டி நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சித்திரநங்கை போட்டிக்கும், ஆபாச அங்க அசைவுகளுடனும், அரைகுறை உடையுடனும் வெளிநாடுகளில் நடைபெறும் அழகு ராணி போட்டிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

நாகரிக வளர்ச்சி என்பது வெளிநாட்டு நடைமுறைகளை அப்படியே பின்பற்றுவதல்ல. எமது சமுதாயத்தின் கலாசார மேம்பாட்டுக்குரிய நடைமுறைகளையே நாம் பின்பற்ற வேண்டும்.

காலத்தின் தேவைக்கேற்ப எமது பாரம்பரியத்தை எமது கலாசாரத்தை வெளிப்படுத்தக்கூடிய வளர்க்கக் கூடிய பெண்களின் தேசத்தின் விடுதலைக்கான எழுச்சியை ஊட்டக்கூடிய எத்தனையோ நிகழ்ச்சிகளை நாம் நடத்தலாம்.

எம்மக்களின் தேசிய உணர்வை மழுங்கடிக்கக் கூடிய இதுபோன்ற கீழ்த்தரமான நிகழ்ச்சிகள் எம் மண்ணில் இடம்பெறாதவாறு எம் மக்கள் அனைவரும் ஒருமித்த சிந்தனையுடனும், தெளிவான நோக்குடனும் செயற்பட வேண்டும்.

தமிழீழப் பிரதேசத்தின் எந்தவொரு மூலையிலாவது இது போன்ற கலாசாரச் சீரழிவுகள் இடம்பெற அனுமதிக்க முடியாது.

இதுபோன்ற கலாசார சீரழிவு நடவடிக்கைகளை ஒழிப்பதன்மூலம் எமது கலாசார மேம்பாட்டுக்காக உழைப்போம் என உறுதி பூணுவோம்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிரதமர். . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

46 ஆவதுபிரிவுகளுக்கு அமைய பிரதமரையும் ஏனையஅமைச்சர்களையும் ஜனாதிபதி விரைவில்நியமிப்பார் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது. [ஒ-எ]

# இந்தியப் படை இறுதியணி புதுடில்லி சென்றடைந்தது!

### பிரதமர் சிங் வரவேற்புரை

புதுடில்லி, மார்ச் 29

இலங்கையில் இருந்து திரும்பிய இந்திய அமைதிப் படையின் கடைசி அணியைச் சேர்ந்தவர்கள் நேற்று புதுடில்லி போய்ச் சேர்ந்தனர்.

அப்போது பிரதமர் வி.பி. சிங் படையினரை வரவேற்று, அவர்கள்மத்தியில் பேசினார்.

பிரதமர் சிங் சொன்னதாவது;

அமைதிப் படையினர் விலக்கிக் கொள்ளப்பட்ட சூழ்நிலையில் இலங்கையில் தமிழ் மக்களின் பாதுகாப்பையும் ஜனநாயக அபிலாஷைகளையும் நிறைவேற்ற இலங்கை அரசு போதிய நடவடிக்கைகளைஎடுக்கும் என்று நான் நம்புகின்றேன்.

மூன்றாண்டுகளாக மிகக் கடுமையான சூழ்நிலைகளில் பணிபுரிந்த அமைதிப் படையினரை நான் பாராட்டுகின்றேன்.

நாட்டுக்கு வரும் எந்தவித அச்சுறுத்தலையும் சமாளிக்க இராணுவத்தினர் கவனத்துடன் இருக்க வேண்டும்— என்றும் பிரதமர் சிங் சொன்னார். [ஒ-எ]


## மாவட்டச் செய்தியாளர்கள்

★ உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளின் மாவட்டச் செய்தியாளர்களாக, கிளிநொச்சியிலும், மன்னாரிலும் பணிபுரியப் பத்திரிகையாளர்கள் தேவை.

★ விண்ணப்பதாரர்கள், சம்பவங்களை, நிகழ்ச்சிகளை, சூழ்நிலைகளை துருவிப்பார்க்கும் கண்ணோடும், நடுநிலைமை நின்று எழுதக் கூடியவர்களுமாக இருக்க வேண்டும்.

★ தமிழில் நல்ல தேர்ச்சி பெற்றவர்களாகவும், ஆங்கில அறிவுடையவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியம். ஆகக் குறைந்தது ஐந்து வருடங்கள் செய்தியாளர்களாகக் கடமையாற்றிய அனுபவம் தேவை.

★ கல்வித் தகைமைப் பத்திரங்கள், நற்சான்றிதழ்களின் பிரதிகளுடன் 03 - 04 - 1990 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

ஆசிரியர்

நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் பிறைவேட் லிமிட்டெட்,

292/2, நாவலர் வீதி,

யாழ்ப்பாணம்.


## பருத்தித்துறையில் புலிகளின் செயலகம்

பருத்தித்துறை, மார்ச் 29

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வடமராட்சிச் செயலகம் பருத்தித்துறை பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. [ஒ-118]

## இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 29

விளையாட்டமைச்சின் ஆதரவில் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்த விளையாட்டாளர் சமூகங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி இன்று தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிமைதானத்தில் மாலை 2.00 மணிக்கு நடைபெறும்.

காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன நிர்வாக முகாமையாளர் திரு. வி. ரி. சிவலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். [ஒ]

## பெரியார் வைரமுத்து காலமானார்

யாழ்ப்பாணம், மார்ச் 29

பிரபல சமூக சேவையாளரும் சமயத் தொண்டருமான பெரியார் திரு. மு. வைரமுத்து தமது 93 ஆவது வயதில் காலமானார்.

மொழிப் பற்றும் சமயப் பற்றும் உடைய திரு. மு. வைரமுத்து அரசாங்கத்தில் நிரந்தரச் செயலாளராகப் பணியாற்றியவர். தவிர, பல சமூக சமய நிறுவனங்களில் உழைத்து தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றியவர்.

அரசாங்க சேவையில் இருந்து இளைப்பாறிய பின்னர் பல பொது ஸ்தாபனங்களின் பொறுப்பான பதவிகளை வகித்து வடக்கின் முன்னேற்றத்துக்கும் பணிபுரிந்தவர் திரு. மு. வைரமுத்து. (*)

## அரசபடைகள்- - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கர்கள் பங்கு கொண்டனர்.

பேச்சுக்களின் போது விடுதலைப்புலிகளுக்கும் ஆயுதப் படையினருக்கும் இடையில் மோதல் ஏற்படாமல் தவிர்ப்பது குறித்து இணக்கம் காணப்பட்டது.

நயினாதீவுக்குச் செல்லும் மக்கள் கடற்படையினரால் சோதனையிடப்படுவதால் கஷ்டப்படுகின்றனர் என்று புலிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை அடுத்து அச்சோதனை உடனடியாகநிறுத்தப்படும் என அரசதரப்பில் உறுதியளிக்கப்பட்டது. நயினாதீவு கோயில் இறங்குதுறையை பொதுமக்கள் உபயோகிக்க அனுமதிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

காரைநகர் கடற்படை விஸ்தரிப்புப் பற்றியும் அதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவது பற்றியும் புலிகள் புகார் செய்தனர்.

விஸ்தரிப்பை தற்காலிகமாக நிறுத்துவதாக அரச தரப்பில் உறுதியளிக்கப்பட்டது. பாதிப்புற்ற பொதுமக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பலாலி முகாம் விஸ்தரிப்புப் பற்றியும் அதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவது பற்றியும் விடுதலைப் புலிகள் பிரஸ்தாபித்தனர்.

பலாலி விமான நிலையத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதால் விஸ்தரிப்பு அவசியமானது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனால் பாதிப்புறும் மக்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்கப்படும் என்றும் அரச தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

பலாலிப்பகுதி மக்கள் மீண்டும் தமது விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்க முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கடற்படை தளத்தையோ, இராணுவ முகாமையோ விஸ்தரிப்பது தங்கள் நோக்கமல்ல என்றும் —

குடாநாட்டில் உள்ள ஆயுதப் படையினரின் எண்ணிக்கை கூட்டப்படமாட்டாது என்றும் —

அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

— இந்தத் தகவல்களை மேற்படி சந்திப்பில் கலந்து [illegible] உதயனுக்குத் தெரிவித்தனர். (உ-9)

## பாஸ்கரலிங்க- - -

நெருங்கிய வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

திரு. பிரேமதாசா விடம் விசுவாசம் கொண்டுள்ள சிரேஷ்ட நிர்வாக அதிகாரிகளில் திரு. பாஸ்கரலிங்கமும் ஒருவராவர் திரு. பிரேமதாசா அமைச்சராக இருந்த காலம் தொடக்கம் அவரது நம்பிக்கைக்குரிய அதிகாரியாகத் திரு. பாஸ்கரலிங்கம்பணி புரிந்துவருகிறார்.

திரு. பாஸ்கரலிங்கத்துக்குப் பிரதான அமைச்சுஒன்று வழங்கப்படும் என்றும், அவரது பெயர் நாடாளுமன்ற உறுப்பினர் தேசியப் பட்டியலில் சேர்க்கப்படும் என்றும் அதற்கு வசதியாக இப்போதுள்ள எம். பி. ஒருவர் ராஜினாமா செய்[illegible] கேட்கப்படுவார் [illegible] வட்டாரங்களில் [illegible] பேச்சடிபடுகிறது. (அ)

# 5 ஆயிரம் தமிழர் கொலைக்கு காரணமானோரை வரவேற்பதா?

### மனச்சாட்சி இடம் தரவில்லை என்கிறார் கலைஞர்

சென்னை, மார்ச் 29

இலங்கை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சுமார் 5 ஆயிரம் தமிழர்கள் கொலை செய்யப்பட்டதற்கு இந்திய இராணுவமே காரணமாக இருந்தது.

இதனால்தான் திருகோணமலையில் இருந்துவந்தஇந்திய அமைதிப் படையின் கடைசி அணிக்கு சென்னையில் அளிக்கப்பட்ட வரவேற்பில் நான் கலந்துகொள்ள வில்லை.

இத்தகவலை தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தமிழ்நாடு சட்டசபையில் தெரிவித்தார்.

திரு. கருணாநிதி மேலும் சொன்னதாவது;

இந்திய இராணுவத்துக்கு நான் எதிரானவன் அல்லன். இந்திய இராணுவத்தை அவமரியாதை செய்யும் நோக்கம் எனக்குக் கிடையாது.

தமிழர்களைக் கொலை செய்வதற்கு இந்திய இராணுவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவேதான் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரத்தில் கலந்து கொள்வதற்கு எனது மனசாட்சி இடமளிக்கவில்லை.

இப்படி திரு. கருணாநிதி சொன்னார்.

இவ்வரவேற்பு வைபவத்தில் முதலமைச்சர் கலந்து கொள்ளாதது தமிழ்க் கலாசாரத்திற்கே விரோதமானது என்று இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ. குமரி அனந்தன் குற்றம் சாட்டியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கு முகமாகவே திரு. கருணாநிதி முன்கண்டவாறு பதிலை அளித்தார். (ஒ-எ)

# இலங்கை உள்நாட்டு விஷயத்தில் இந்தியா தலையிட விரும்பவில்லை

### வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் அறிவிப்பு

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட இந்தியா விரும்பவில்லை. இலங்கையுடன் நட்புறவை கொண்டிருக்கவே இந்தியா விரும்புகின்றது.

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. இந்தர் குமார் குஜ்ரால் நேற்று ராஜ்ய சபையில் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:-

தமிழகத்திலும் ஒரிஸ்ஸாவிலும் இப்போதுள்ள சுமார் 90 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரும் விரைவில் தாயகம் திரும்புவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும்படி இலங்கையைஇந்தியா வலியுறுத்தும்.

ஒரிஸ்ஸாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் சட்டத்தை மதித்து நடந்து கொள்வதை உறுதி செய்வதற்குத் தேவையான பந்தோபஸ்து நடவடிக்கைகள் அகதி முகாம்களில் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் சட்டவிரோதமான செயலில் இறங்காமல் தடுப்பதற்காக உரிய நடவடிக்கைகளை தீவிரமாக்கும்படி ஒரிஸ்ஸா மாநில அரசு கோரப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் இந்தியாவில் இல்லை- என்றார். [உ,எ]

# முதலில் பிரச்சினைக்குத் தீர்வு அதன்பின் தேர்தலை நடத்தலாம்

### முஸ்லிம் மக்களின் யோசனை இது

மட்டக்களப்பு, மார்ச் 29

தற்போது உருவாகியுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்ட பின்பே, வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடாத்தப் பட வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்புக்கு வருகை தந்த உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீதிடம் காத்தான்குடி முஸ்லிம் பிரமுகர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மேற்படி சந்திப்பில் முஸ்லிம்கள் தரப்பில் தெரிவிக்கப் பட்டவையாவன:-

இனப் பிரச்சினைக்கு காணப்பட விருக்கும் தீர்வு அமுலுக்கு வர முன்பு பகிரங்கப் படுத்தப்படல் வேண்டும். அதற்கான உத்தரவாதம் இரு தரப்பினாலும் வழங்கப் பட வேண்டும்.

அம்பாறை மாவட்டம் மாத்திரம் கொண்ட தனி முஸ்லிம் மாகாணம் வேண்டாம். கிழக்கில் சகல முஸ்லிம் பிரதேசங்களையும் உள்ளடக்கியதாகவே மாகாணம் அமைய வேண்டும்.

வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபை அமைவதென்றால் முஸ்லிம்களின் பாதுகாப்பு, சுதந்திரம், மத கலாச்சாரம், பண்பாடு, தனித்துவம் - அரசியல் அமைப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட முன்பு முஸ்லிம்களின் அடிப்படைத் தேவைகள், அபிலாசைகள் கவனத்திற் கொள்ள வேண்டும். (ஒ-21)

## இறைமை வேண்டும் என்பது குயபெக் மக்கள் விருப்பம்!

கனடாவில் உள்ள குயபெக் மாகாண மக்களில் பெரும் பாலானோர் தங்களுக்கு இறைமையுள்ள நாடு தான் வேண்டும் என்று கூறியுள்ளனர்.

இத்தகவல் கருத்துக் கணிப்பின் மூலம் தெரியவந்ததாக 'லாபிரஸ்ஸே' என்னும் செய்திப் பத்திரிகை தெரிவித்தது.

சுதந்திரம் வேண்டும் என்ற நிலைப்பாட்டை அரைப்பங்குக்கும் குறைந்தவர்களே ஆதரிக்கின்றனர் என்பதும் கருத்துக் கணிப்பில் தெரிய வந்தது.

கனடாவில் உள்ள மாகாணங்களில் குயபெக், பிரெஞ்சு மக்கள் வாழும் பிரதேசமாகும்.

## கட்டட ஒப்பந்தகாரர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம் மார்ச் 29

அரசாங்க கட்டட ஒப்பந்தக்காரர்கள் சங்கத்தை மீள இயங்க வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய இந்தச் சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அலுவலகத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## அங்குரார்ப்பண கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

திருநெல்வேலி - அரசடி அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் தேவஸ்தான வழிபடுவோர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கோயில் மண்டபத்தில் நடைபெறும். புதுவருட உத்தியோகத்தர் தெரிவும் இடம்பெறும்.

## ஆளுநரைக்- - -

(8ஆம்பக்கத் தொடர்ச்சி)

கூறியதாகவும் —

அதைத் தொடர்ந்து தாம் கொழும்பிலேயே தங்கியிருந்ததாகவும் —

ஆனால் வேலைக்குச் சமூகமளிக்கவில்லை என்று காரணம் காட்டித் தமது இடங்களுக்குப் புதியவர்களை ஆளுநர் நியமித்திருப்பதாகவும்

பதவி இழந்த செயலாளர்களைச் சேர்ந்த வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. [அ]


## உடன் தேவை-நேரில் வரவும்

1. பத்திரிகை விநியோகம் செய்வதற்கு ஆட்கள் உடன் தேவை

மோட்டார் சைக்கிள் சொந்தமாக வைத்திருப்பவர்கள் மட்டும் நேரில் வரவும்.

முன் அனுபவம் உடையவர்களுக்கும், யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை தரப்படும்.

கல்வித் தகைமை, தொழில் அத்தாட்சிப் பத்திரங்களுடனும், நற்சான்றிதழ்களுடனும் வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பி. ப. 4 மணிக்கும் இடையில் நேரில் வரவும்.

2. பத்திரிகை மடிப்பதற்கு ஆட்கள் தேவை

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களும், முன் அனுபவம் உடையவர்களும் விரும்பப்படுவர்.

அத்தாட்சிப் பத்திரங்கள், நற்சான்றிதழ்களுடன் வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பி. ப. 4 மணிக்கும் இடையில் நேரில் வரவும்.

முகாமையாளர் (ஆளணி)

நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,

292/2, நாவலர் வீதி,

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

NESON'S
FUNERAL UNDERTAKERS
FLORIST
CASKET EMBALMING
FUNERAL COACHES
No: 563, HOSPITAL ROAD,
VEMBADI JUNCTION JAFFNA.

# உதயன்

29 - 03 - 1990 வியாழக்கிழமை

அந்தியகால சேவைக்கு உங்கள் அருகிலேயே
இருக்கும் அன்பன்
"நேசன்ஸ்"
★ பிரேதப் பெட்டிகள்
★ ஊர்வல வாகனம்
★ மலர் வளையங்கள்
★ எம்பாமிங்
★ நேசன்ஸ் ★
(வேம்படிச் சந்தி)
563, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

வவுக்கெல படுகொலைகள்:

## மூன்று அரசியல்வாதிகள் எந்நேரமும் கைதாகலாம்

கொழும்பு, மார்ச் 29
கம்பஹா மாவட்டத்தில் வவுக்கெல என்னும் இடத்தில் 12 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக மூன்று அரசியல்வாதிகளை பொலிஸார் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்று சொல்லப்படுகிறது.

மூன்று மாணவர், ஒரு பெண் உட்பட 12 பேர் ஆயுததந்தரித்த இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அச் சம்பவத்தில் தப்பி ஓடி வந்த இளைஞர் ஒருவர் கொடுந்த தகவலைத் தொடர்ந்தே இப்படு கொலைச் சம்பவ விவரங்கள் வெளிவந்தன. (உ-எ)

## யாழ்ப்பாணத்தில் விடைத்தாள் திருத்த ஐந்து நிலையங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 29
எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் ஜீ. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சை விடைத் தாள்களைத் திருத்த ஐந்து நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் இயங்க இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தைத் தவிர்ந்த மற்றைய பிரதேசத்தைச் சேர்ந்த விடைத் தாள்களே இங்கு திருத்தப்படும்.

யாழ் இந்து, இந்து மகளிர், கனகரத்தினம் மகாவித்தியாலயம், வேம்படி மகளிர், திருக்குடும்ப கன்னியர் மடம் ஆகிய இடங்களிலேயே விடைத்தாள் திருத்தும் வேலைகள் நடைபெறும்.

இதற்கான திகதியை விரைவில் பரீட்சைத் திணைக்களம் அறிவிக்கும். (இ-3)

## 10 லட்சம் மீற்றர் துணிகள் புத்தாண்டுக்கு இறக்குமதி

புத்தாண்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட 10 லட்சம் மீற்றர் துணிகள் விற்பனைக்கு வரவுள்ளன.

நியாயமான விலையில் துணிமணிகள் மக்களுக்குக் கிடைக்கவே இந்த ஏற்பாடு என்று தெரிவிக்கப்பட்டது.

தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்துள்ள துணிகளே கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் மூலம் விற்கப்படவுள்ளன. [உ-எ]

## வாகன வரிப்பத்திரம்; திங்கள் முதல் 10வீததண்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 29
எதிர்வரும் முதலாம் திகதிக்குப் பின்னர் மோட்டார் வாகன வரிப்பத்திரம் பெறுவதற்கு பத்துவீதம் தண்டம் செலுத்த வேண்டும்

கடந்த பெப்ரவரி மாதம் முதல் யாழ் - செயலக இறைவரித்திணைக்களத்தால் மோட்டார் வாகன வரிப் பத்திரங்கள் சில சலுகைகளுடன் வழங்கப்பட்டு வந்தன.

மோட்டார் திணைக்களத்தின் வழமையான நடைமுறையின் படி ஒரு குறிப்பிட்ட ஆண்டுக்குரிய வரிப் பத்திரத்தை அவ்வாண்டு மார்ச் 31 ஆம் திகதி வரை தண்டம் ஏதுமின்றி வரி செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மார்ச் 31 ஆம் திகதிக்கும் ஜூன் 30 திகதிக்கும் இடையில் வரிப்பத்திரம் பெற்றுக் கொள்வோருக்கு கூடுதலாக 10 வீதம் தண்டமும் –

ஜூலையிலிருந்து டிசம்பர் வரை 20 வீதம் தண்டமும், பின்பு 30 வீதம் தண்டமும் வரிப்பத்திரம் பெறுவதற்கு அறவிடப்படும்.

இதே நடைமுறை இங்கும் மேற்கொள்ளப்படும் என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கிளிநொச்சி, பரந்தன் அடகு நகைகள் மீளளிப்பு

கிளிநொச்சி பரந்தன் பகுதி மக்களின் அடகு நகைகள் எதிர்வரும் இரண்டாம் திகதி முதல் கிளிநொச்சி மக்கள் வங்கிக்கருமபீடத்தில் வைத்து வழங்கப்பட விருக்கின்றன.

கிளிநொச்சி தபால் நிலையத்தில் இந்த கருமபீடம் அமைக்கப்பட விருக்கின்றது

பரந்தன் கிளையில் 1989 செப்டெம்பர் 27 ஆம் திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு எதிர்வரும் இரண்டாம்மூன்றாம் திகதிகளிலும்–

கிளிநொச்சிக் கிளையில் 1989 ஜூன் 23 ஆம் திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு எதிர்வரும் நாலாம் திகதியும் அடகு நகைகள் மீளளிக்கப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தினங்களில் காலை 8 30 மணியிலிருந்து நண்பகல் ஒரு மணி வரை அடகு நகைகள் மீளளிக்கப்படும். (உ-3)

## தீவுப்பகுதியில் சேவையாற்ற இருந்த படகு வேலைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை

யாழ்ப்பாணம், மார்ச்29
தீவுப்பகுதியில் புதிய படகுச் சேவையை நடத்துவதற்காகக் கட்டப்பட்டு வரும் படகின் வேலைகள் இன்னும் பூர்த்தியாகவில்லை. அதனால் படகும் வரவில்லை. அதை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கவிருந்தபுனர்வாழ்வு ராஜாங்க அமைச்சர் திரு. வின்சென்ட் பெரேராவும் வரவில்லை.

தீவுப்பகுதியில் சேவையில் ஈடுபட புதிய படகு ஒன்றை வழங்க புனர்வாழ்வு அமைச்சர் நடவடிக்கை எடுத்து டொக்யாட் நிறுவனத்திடம் ஓடர் கொடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் வேலைகள் முடிவடையாததால் படகு வரவில்லை விரைவில் படகுவந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3-111)

### மரணம்

யாழ்ப்பாணம் மார்ச் 29
அலரிக் கொட்டை உட்கொண்டு மயக்கமுற்ற நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் கடந்த திங்களன்று அனுமதிக்கப்பட்டிருந்த சுப்ரமணியம் சுபலதா (வயது 17) என்ற இளம் பெண் நேற்று மரணமானார்.

இவர் யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்தவர். (உ-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29 - 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யாழ் மாவட்ட

## கடந்தவருட அபிவிருத்தி வேலைகள் இந்த வருடம் பூர்த்தி செய்யப்படும்

### பணமும் வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 29
யாழ்மாவட்டத்தில் கடந்த வருடம் மேற்கொள்ளப்படாத அபிவிருத்தித்திட்டங்களை இவ்வருடம் மேற்கொள்ள அடுத்த வாரத்துக்கு முன்பாக பணம் வந்துசேர இருக்கிறது.

கடந்த வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 250 லட்சம் ரூபாவில் சொற்ப வேலைகளே மேற்கொள்ளப்பட்டன.

அந்தவருடம் திட்டமிடப்பட்ட வேலைகளை இந்த வருடம் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோது, இவ்வாண்டு திட்டங்கள் வந்தால்தான் பணம் தர முடியும் என்று அரசு கூறி வந்தது.

யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடாத்தியதை அடுத்து கடந்த வருடத்திட்டத்தை செயற்படுத்த நிதி வழங்க சம்மதம் அளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சென்றுள்ள அதிகாரி இந்த நிதியை அடுத்த வார முற்பகுதியில் எடுத்து வருவார் எனத் தெரியவந்தது (இ-3)

## இந்தியாவின் அதிகார விஸ்தரிப்பு இலங்கையில் தோற்றுப் போனது!

### பேராசிரியர் புல்ஜின்ஸ் கருத்து

கொழும்பு மார்ச் 29
கோவா, சிக்கிம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடந்து கொண்டதற்கு முரணாக சிறிய அயல் நாடான இலங்கையில் இந்தியா தனது அதிகார விஸ்தரிப்பை நிலை நிறுத்த முடியாது போய் விட்டது.

1947 இல் இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் அதற்குக் கிடைத்த இத்தகைய முதல் அனுபவம் இதுதான்!

இந்திய அமைதிப்படை வெளியேறுவது பற்றி கருத்து வெளியிடுகையில் பேராசிரியர் ரால்ப் புல்ஜின்ஸ் இப்படித் தெரிவித்தார்.

அவர் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு இது பற்றித் தெரிவித்ததாவது ;

பாகிஸ்தானுடனும், சீனாவுடனும் தகராறுக்குரிய பிரதேசங்களில் இன்னமும் இந்திய துருப்புக்கள் நிலை கொண்டுள்ளன.

இலங்கையில் இருந்து இந்தியத் துருப்புக்களைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டவர்களின் முயற்சி இறுதியில் வெற்றி கண்டது. அனைவரினதும் பாராட்டுதல்களுக்கு அவர்கள் உரியவர்கள்.

அமைதிப் படையை வெளியேற வைத்தது ஒரு பெரிய தேசிய சாதனையாகும்.

இந்திய ஆக்கிரமிப்புக்கான சந்தர்ப்பங்களை நாமே எமது சொந்தக் கொள்கைகளால் உருவாக்கிக் கொடுத்தோம் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எமது பெரிய அயல் நாட்டுடனும் அங்கு ஆட்சி புரியும் அனுதாப மிக்க அரசுடனும் எமது உறவுகளை மீண்டும் கட்டி எழுப்பும் இன்னொரு சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ளது.

இச்சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்தி இரு தரப்பு வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்க முயற்சி எடுக்க வேண்டும்.

இந்தியாவுடன் நாம் திறந்த மனபாங்குடன் சரியான முறையில் உறவுகளைப் பேண வேண்டும். இப்படியான உறவை வைத்துள்ளோம் என்பதை இந்தியாவை ஏற்கச் செய்யவும் வேண்டும். இதுவே இன்று முக்கியமானதாக உள்ளது

எமது எண்ணம், நடவடிக்கை குறித்து இந்தியா சந்தேகம் கொள்ள இடமளிக்கக் கூடாது.

இப்படி பேராசிரியர் ரால்ப் புல்ஜின்ஸ் தெரிவித்தார். (உ-எ)

## ஆறாவது திருத்தத்தை நீக்குமாறு ஐ. நா. சாசனப்படி கேட்கிறோம்

### திருமலை பொறுப்பாளர் ரூபன் விளக்கம்

திருகோணமலை, மார்ச் 29
"ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்துக்கு அமையவே அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கும்படி அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்."

— இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ரூபன்.

திருகோணமலையில் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள், உப அதிபர்கள் ஆகியோரை கூட்டம் ஒன்றுக்கு அவர் நேற்று அழைத்திருந்தார்.

அந்தக் கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. ரூபன் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின்படி பல்வேறு இனங்களைக் கொண்ட ஒரு நாட்டில் ஒரு இனத்துக்குச் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருக்கவேண்டும். அல்லது அந்த இனம் தான் விரும்பிய நேரத்தில் பிரிந்து போகக் கூடியதாக அதற்கு உரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

அதன் அடிப்படையிலேயே ஆறாவது திருத்தத்தை நீக்கும்படி கேட்கிறோம்.

அரசு எம்மைப் பேச்சுக்கு அழைத்தது. எமது உரிமைகளை எமக்கு வழங்குவார்கள் என்ற நம்பிக்கையில் நாம் பேச்சுக்குச் சென்றிருக்கிறோம்

பேச்சுக்கு நாம் போனதற்கு எமக்குப் பலமில்லை என்பது காரணமல்ல. எமக்கு பலம் இருந்தபடியால்தான் அரசு எம்மைப் பேச்சுக்கு அழைத்தது.

பேச்சுக்கள் சுமுகமாக நடந்து நிரந்தரத் தீர்வு கிட்டும் என்று நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

திருகோணமலையில் பீதியை, பயத்தை உண்டாக்க சிலர் முயற்சிக்கிறார்கள். நாம் அதற்கு அனுமதிக்கப் போவதில்லை — என்றார். (உ)

## மாடு வெட்டும் 'களம்' மீண்டும் கொட்டடியில்!

யாழ்ப்பாணம், மார்ச் 29
இறைச்சிக்காக மாடுகளை வெட்டும் 'கொல்களம்' மீண்டும் கொட்டடியில் அமைக்கப்பட இருக்கிறது

கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக கொட்டடியில் இயங்கி வந்த 'கொல்களம்' மூடப்பட்டது என்பதும்—

அதன்பின்னர் இறைச்சிக் கடைக்காரர் தங்கள் வசதிக்கேற்ற இடங்களில்எல்லாம் மாடுகளை வெட்டிவந்தனர் என்பதும் தெரிந்தவையே.

கொட்டடியில் இந்த மாடு வெட்டும் களம் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் இயங்கத் தொடங்கும்.

இந்தக்கொலைக்களம்இயங்கத் தொடங்கியதும் யாழ் சுகாதாரப் பகுதியினருக்கும் தங்கள் சோதனைகளை நடத்த வசதியாக இருக்கும் என அதிகாரி ஒருவர் உதயனுக்குக் கருத்துத்தெரிவித்தார். (எ-3)

### கத்திக்குத்து காயமுற்றவர் மரணமானார்

யாழ்ப்பாணம் மார்ச் 29
கடந்த 21ஆம் திகதி கத்திக்குத்துக் காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த வயோதிபர் நேற்று முன்தினம் இரவு மரணமானார்.

தெல்லிப்பளை கிழக்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பொது சுகாதார பரிசோதகர் துரையப்பா கனகசுந்தரராஜா [வயது 63] என்பவரே உயிரிழந்தவராவார்.

புளியம்பழம் உலுத்தும் தகராறு ஒன்றில் உறவினர் ஒருவர் இவரை கத்தியால் குத்தியதாகத் தெரிவிக்கப் பட்டது. (உ-5)

அன்னை பூபதி நினைவாக

## வவுனியாவில் நடந்துவரும் சுழற்சிமுறை உண்ணாவிரதம்

வவுனியா, மார்ச் 29
அன்னை பூபதியின் நினைவையொட்டி வவுனியாவில் சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்திற்கான ஏற்பாடுகளும், சிரமதான நிகழ்ச்சிகளும் பரவலாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

வவுனியா நகரில் பஸ்நிலையப்பகுதியில் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள பந்தலில் புதன்கிழமை தொடக்கம் சுழற்சிமுறை உண்ணாவிரதம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் வெளிக்குளம் பிள்ளையார் கோவிலில் அப்பகுதி பொதுமக்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்ட சிரமதான நிகழ்ச்சியும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. [ஓ-164)

வடக்கு - கிழக்கு மாகாண சபை:

## ஆளுநரைக் குறைகூறும் பதவி இழந்த செயலாளர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 29
வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அமைச்சுச் செயலாளர்கள் 9பேர் பதவியிலிருந்து நீங்கியதாகக் கருதி அவர்களின் இடங்களுக்குப் புதியவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் அல்லவா!

புதிய நியமனங்களால் பதவி இழந்த முன்னாள்செயலாளர்கள் பலரும் தாம் பதவி இழக்கக் காரணமாக இருந்தவர்கள் மாகாணசபையின் ஆளுநர் திரு. நளின் செனிவிரத்தினாவும், அமைச்சர் ஹமீதுமே என்று குறை கூறுகிறார்கள்.

முதலமைச்சர் வரதராஜப் பெருமாளும் சகாக்களும் தலைமறைவானதைத் தொடர்ந்து, பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டுத் தாம் கடமைக்குச் செல்ல முடியாதிருப்பதாக முதலில் அமைச்சர் ஹமீதிடமும், பின்னர் ஆளுநரிடமும் தாம் எடுத்துக் கூறியிருந்ததாகவும் —

உரிய பாதுகாப்பு வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதாகவும் அதுவரை கடமைக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை என்றும் இருவரும் மேலோட்டமாகத் தம்மிடம்

(7ஆம் பக்கம் பார்க்க)

## டி. ஐ. ஜி உடுகம்பொலவுக்கு நீதிமன்றம் வாரண்ட்!

சட்டத் தரணி லியனாராய்ச்சி கொலைவழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் தெரிபடத் தவறிய பிரதிப் பொலீஸ் மாஅதிபர் உடுகம்பொலவைக் கைதுசெய்து ஆஜர்செய்யும்படி கொழும்பு மேல்நீதிமன்றம் வாரண்ட் பிறப்பித்தது

திரு. உடுகம்பொல தற்சமயம் வாஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பணிபுரிகிறார். அவர் இப்போது வைத்திய சிகிச்சை பெற்று வருகிறார். அவர் ஏப்ரல் முதல்வாரத்தில் கொழும்பு வரஉள்ளார்.

இத்தகவலைநீதிமன்றத்தில் அரச சட்டத்தரணி பலித பெர்னான்டோ வெளியிட்டார்.

லியனாராய்ச்சி கொலை வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள் சி. வி. விக்னேஸ்வரன், எச். என். டி. ஜெயசூரியா, எஸ். கடவத்தாராய்ச்சி ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. (ஓ-எ)

## இந்தியாவிலிருந்து வெங்காயம், மிளகாய்

### மீண்டும் இறக்குமதி செய்ய முடிவு

இந்தியாவுடனான வர்த்தகத்தொடர்புகளை கூட்டுறவு மொத்த விற்பனைஸ்தாபனம் மீண்டும் ஆரம்பித்துள்ளது மீண்டும் இந்தியாவிலிருந்து ஆயிரம் மெட்ரிக்தொன் பம்பாய் வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. பாவனையாளருக்கு ஒரு கிலோ 17 ரூபா 50 சதத்துக்கு இது விற்பனை செய்யப்படும் — இப்படி கூ. மொ. வி. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தென் இலங்கையில் வன்செயல்கள் உச்சக் கட்டத்தை அடைந்த சமயம் இந்தியாவில் இருந்து பம்பாய் வெங்காயத்தை இறக்குமதி செய்வதை இலங்கை நிறுத்தியது. பாகிஸ்தானிடம் இருந்து இந்த ரக வெங்காயத்தை கூ. மொ. வி. வாங்கி வந்தது

இந்தியவில் இருந்து 500 மெட்ரிக் தொன் செத்தல் மிளகாயை இறக்குமதி செய்வதற்கான கட்டளையை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்தற்போது அனுப்பி வைத்துள்ளது. (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் செல்வராசா
புங்குடுதீவு-1

வேலணை பிரதேசசபை புங்குடுதீவு உப அலுவலக நீர் விநியோகப் பகுதியில் கடமையாற்றும் சுப்பிரமணியம் செல்வராசா 27- 03- 1990 இல் காலமாகிவிட்டார். அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், வரதராஜா, ஜெயகாந்தன், செல்வராணி, ஆகியோரின் தந்தையாரும், சற்குணவதி, சிவதேவன் ஆகியோரின் மாமனாரும் செல்வரெட்ணம், (C.T.B), நாகேஸ்வரன் (ஈசன்) ஆகியோரின் சகோதரரும் சுதா, சுகந்தா, நிஷாந்தி, கிருஷாந்தி வவா, தருஷ்சா, செல்வி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-03-1990 வியாழக்கிழமை 11-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மணற்காடுமயானத்திற்குஎடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
1-ம் வட்டாரம்,
புங்குடுதீவு.
எம். ஏ. சத்தியநாதன்
[12236]

### திரு. கே. எஸ். சுப்பிரமணியம்

(சரஸ்வதி கமம் பரந்தன், கே. எஸ். சுப்பிரமணியம் அன்சன்ஸ் கம்பளை, சபாபீடி கம்பனி கம்பளை, ஸ்தாபகர்)

கே. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் 27-03-1990 காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது கம்பளை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (29-03-1990) வியாழக்கிழமை 11-00 மணியளவில் கம்பளை மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
கம்பளைச் சந்தி,
கம்பளை.
கே. கே. எஸ். சபாரட்ணம்
[12233]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org